# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 308 புரட்டாதி 16ஆம் நாள் வியாழக்கிழமை 03 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


### எமது ஆட்சியில்

# காணாமலாக்கப்பட்டோரின் உண்மைநிலை வெளிப்படும்

## அநுரகுமார தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 3

எமது ஆட்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உண்மை நிலையை வெளிப்படுத்துவோம் என்று தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார திசநாயக்க. அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என்பன தொடர்பிலும் உரிய தீர்வு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். 25

## விபத்தில் மூடுந்தின் சாரதி சாவு!



கிளிநொச்சி, ஒக். 3

கிளிநொச்சி- கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆனையிறவுப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் மூடுந்தின் செலுத்துனர் உயிரிழந்தார். வெள்ளத்தையைச் சேர்ந்த ஆதிமூலம் பரமேஸ்வரன் (வயது-49) என்பவரே அவ்வாறு 25

## ஈஸ்டர் தாக்குதல் இழப்பீடனைத்தும் முழுமை பெற்றன

கொழும்பு, ஒக். 3

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாக இழப்பீடுகள் வழங்கப்பட்டன. இதற்காக 300 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 25

### ஊடகங்களிடம் பேசவேண்டாம்

## என்று கோத்தாவுக்கு உத்தரவு

கொழும்பு, ஒக். 3

ஊடகங்களிடம் எதுவும் பேசாமல் ஒதுங்கியிருக்குமாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆலோ 25

## அரச தலைவர் தேர்தல் தொடர்பில் பொதுவான முடிவுக்கு வரவேண்டும்

### சம்பந்தன், கஜேந்திரகுமாரிடம் சிவில் சமூகத்தினர் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 3

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் பொதுவான முடிவொன்றுக்கு வர வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. 25

### கோத்தாவின் குடியுரிமை விவகாரம்:

## இரட்டைக்குடியுரிமைச் சான்றிதழில் கையொப்பத்தை மகிந்தவே இட்டார்

### சட்டத்தரணி சுரேன் வாதம்

கொழும்பு, ஒக். 3


குடியுரிமை சட்டத்தின் 19ஆவது அத்தியாயத்துக்கு அமைய, இரட்டை குடியுரிமை தொடர்பில் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் பொறுப்பான அமைச்சருக்கு மட்டுமே உள்ள நிலையில், கோத்தபாய ராஜபக்சவுக்கான குடியுரிமைச் சான்றிதழை முன்னாள் 25

## எழுத்துமூல ஒப்பந்தம் கிழித்தெறியப்படலாம்

### நம்பிக்கையே தேவை என்கிறார் கோத்தாவை ஆதரிக்கும் குரே

கொழும்பு, ஒக். 3

கடந்த காலங்களில் தமிழ் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. எழுத்துமூல ஒப்பந்தங்கள் மாத்திரம் போதுமானதல்ல. நம்பிக்கைதான் முக்கியமாகும். இவ் 25



## வெல்வது உறுதியே

### சொல்கிறார் கோத்தா

கொழும்பு, ஒக். 3

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெறுவது உறுதி. எனக்கு எதிராக எவ்வாறான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப் 25

## விவாதத்துக்கு இணங்காத கோத்தா சஜித், அநுர மாத்திரம் இணங்கினர்

கொழும்பு, ஒக். 3

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்களை ஒரே மேடையில் அமர வைத்து, முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக அவர்களின் 25

## அரச தலைவர் தேர்தலுக்காக 20பேர் இதுவரை கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், ஒக். 3

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலுக்காக இதுவரையில் 20 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் 8ஆவது 25

## போதிய தெளிவில்லாத நிலையில் கண்டபடி வாய்திறக்க வேண்டாம்

### சிவஞானத்துக்கு 'செக்'

யாழ்ப்பாணம், ஒக். 3

கட்சிக்குள் இருந்து கொண்டு தலைமையின் நடவடிக்கை தொடர்பில் கேட்டறிந்து கொள்ளாது கண்டபடி வாய் திறக்க வேண்டாம் என சீ.வீ.கே.சிவஞானத்துக்கு அவர் சார்ந்த தமிழ் அரசுக் கட்சியின் உயர்பீடம் அறிவுறுத்தியுள்ளது.

கட்சி ஒரு விடயத்தைத் தீர்மானிக்கும் முன்னர் அது தொடர்பில் தனிப்பட்ட கருத்துக்களை கட்சியின் நிலைப்பாட்டில் இருந்து வெளிப்படுத்தக்கூடாது. இவ்வாறான கருத்துக்கள் கட்சிக்குள் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## பெரமுன இணங்காவிடின் ஐ.தே.க தரப்புக்கு ஆதரவு!

### மைத்திரியின் நிலைப்பாடு இது

கொழும்பு, ஒக். 3

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி பேச்சுக்கள் தோல்வியடைந்தால், சஜித் பிரேமதாசவை 25

## பதில் சொலிஸ்ட்டர் ஜெனரலாக சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம்

கொழும்பு, ஒக். 3

பதில் சொலிஸிட்டர் ஜெனரலாக அரச தலைவர் சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். 04

# ஆலய வளாகத்தில் சடலம் தகனம் இந்து வழிபாடுகளுக்கு எதிரானதே

### கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம் கண்டனம்

கொழும்புத்துறை, ஒக். 3

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்துக்குள் பிக்குவின் சடலத்தைத் தகனம் செய்தமை இந்துக்களின் சமய வழிபாடுகளுக்கு எதிராகவுள்ளது. ஆலயத்தின் புனிதத் தன்மையைக் களங்கப்படுத்தியுள்ளது என்று யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம் தெரிவித்துள்ளது. இது பற்றிய கண்டன அறிக்கை 25

### உள்நாட்டு வானூர்திச் சேவை

## வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கியது கொழும்பு

கொழும்பு, ஒக். 3

வெளிநாட்டு வானூர்தி நிறுவனங்கள் இலங்கையின் உள்நாட்டுவானூர்தி நிலையங்களுக்கு சேவைகளை நடத்துவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை தேடிய நட்பு

காட்டில்பலம்கொண்ட ஒரு யானை வாழ்ந்து வந்தது. அதன் பெரிய உருவம் கண்டு மற்ற விலங்குகளும் பறவைகளும் ஒதுங்கியே இருந்தன. இதனால் யானை நண்பர்கள் இன்றி, தனிமையில் தவித்தது. தன்னோடு நட்புடன் பழக ஒரு நண்பனைத் தேடியது. நாமே சென்று ஒரு நட்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் காட்டுக்குள் நடக்க ஆரம்பித்தது. வழியில் ஒரு மரத்தில் குரங்கைக் கண்டது.

"குரங்கே, நான் யாருடைய நட்பும் கிடைக்காமல் மிகவும் மன வேதனையில் உள்ளேன். என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்வாயா?" என்றது. அதைக் கேட்டதும் குரங்கு, 'ஹி..ஹி..." என்று சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்"? "யானையாரே, நான் மரத்துக்கு மரம் தாவுபவன். நீரோ தரையில் நடப்பவர். நாம் எப்படி நண்பர்களாக முடியும்? என்னைப்போல உங்களால் மரம் தாவ முடிந்தால் மட்டுமே நட்பு சாத்தியம்" என்று சொல்லி விட்டு ஓடியது.

அடுத்ததாக மரத்தின் மீது அமர்ந்தபடியே 'கூக்கூ கூக்கூ' என்று குயில் கூவியதைக் கேட்டது யானை.

"'ஆஹா! என்ன இனிமையான குரல் வளம். இந்தக் குயிலிடம் நட்புகொண்டால் மனம் மகிழ்ச்சியாக இருக்கும்" என்று நினைத்த யானை, "குயிலே, என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்வாயா?" என்று கேட்டது.

"என்னைப்போல உம்மால் இனிமையாகப் பாட முடியுமா? அப்படிப் பாடுவதாக இருந்தால் நண்பனாக ஏற்றுக்கொள்கிறேன்" என்றது குயில்.

யானை சோகத்துடன் திரும்பி நடந்தது. பாதையில் மயில் ஒன்று தன் தோகையை விரித்து அழகாக ஆடிக்கொண்டிருந்தது. மயிலின் ஆட்டத்தைக் கண்ட யானை, மெய் மறந்து நின்றது.

"ஆஹா! மயில் எவ்வளவு அழகாக ஆடுகிறது! இதனோடு நட்பு கொண்டால் தினமும் இதன் ஆட்டத்தைக் கண்டு ரசிக்கலாம்" என்று நினைத்த யானை, மயிலிடம் தன் விருப்பத்தைக் கூறியது.

"யானையாரே, நீர் ஆசைப்படுவது விநோதமாக உள்ளது. என் திறமைக்கு முன்னால் நீங்கள் எல்லாம் பூஜ்யம். தள்ளிப்போங்கள்" என்று தோகையை ஆட்டிக்கொண்டே சென்றுவிட்டது.

அப்போது ஓர் எலி வந்தது. உடனே தன் கோரிக்கையை வைத்தது யானை. "யானையாரே, உம்மோடு நட்புகொள்ள எனக்கும் ஆசைதான். ஆனால் நம் இருவருக்கும் உருவ வேறுபாடு மலைக்கும் மடுவுக்குமாக உள்ளது. நீங்கள் என்னைப்போல உருவத்தைச் சிறிய தாக்கிக் கொண்டு வந்தால் அப்போது நட்பு கொள்ளலாம்" என்றது எலி.

சட்டென்று புதரிலிருந்து வெளியே வந்தது ஒரு புலி. அதன் பிடியில் குரங்கு மாட்டிக்கொண்டு உயிருக்குப் போராடியது. அதன் வேதனைக் குரல் கேட்ட யானை, ஓடிவந்து புலியுடன் போராடியது. யானையின் பலத்தை, புலியால் சமாளிக்க முடிய வில்லை. யானை புலியைத் தூக்கி வீசியது.

"என்னை விட்டு விடு. இனி நீ இருக்கும் பக்கமே வர மாட்டேன்" என்று சொல்லி விட்டுத் தலைதெறிக்க ஓடி மறைந்தது புலி. அதுவரை மறைவில் நின்று வேடிக்கை பார்த்த குரங்கு, மயில், குயில், எலி எல்லாம் வெளியில் வந்தன.


"யானையாரே, எங்களை மன்னிக்க வேண்டும். நாங்கள்தங்களை மிகவும் இழிவாகப் பேசிவிட்டோம். இந்தப் புலியால் பலர் உயிரை இழந்துள்ளார்கள். தக்க சமயத்தில் புலியிடமிருந்து எங் களைக் காப்பாற்றியதுடன் எங்களுடைய கர்வத்தையும் அழித்து விட்டீர்" என்று உருக்கமாகப் பேசியது குரங்கு.

"என்னையும் மன்னித்துவிடுங்கள். ஆபத்து காலத்தில் உதவுவதுதான் நல்ல நண்பனுக்கும் உண்மையான நட்புக்கும் இலக்கணம்" என்றது மயில்.

"யானையாரே, உம்மை நண்பராக அடைவதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றது குயில்.

---

## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 11 . 1970

இறப்பு 02 . 10 . 2019

CS28453(16/17)

### ஆதிமூலம் பரமேஸ்வரன்

பருத்தித்துறை பூதராயர் கோவில் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், கொழும்பு-06, வெள்ளவத்தை, E.S.பர்னாண்டு மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆதிமூலம் பரமேஸ்வரன் நேற்று (02.10.2019) புதன்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் ஆதிமூலம் ஜெயராணி தம்பதிகளின் அன்பு மகனும் சிவராஜா, இரத்தினராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜிதாவின் அன்புக் கணவரும் துஷான், நிலூஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஷ், ஜெயகௌரி ஆகியோரின் சகோதரரும், சிவமங்கை, அனந்தராஜா, அமுதா, நல்லைகுமரன் ஆகியோரின் மைத்துனரும் மீரா, திவ்யன், சரணியா, துவாரகா ஆகியோரின் மாமாவும் பானுஜா, வைஸ்ணவி, லாவண்யா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2019) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு துலாவட்டை ஒழுங்கை, 1ஆம் கட்டை, புலோலி மத்தி, பருத்தித்துறையில் நடைபெற்று மு.ப 10மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 226 0159
078 397 1115

**தகவல்: குடும்பத்தினர்.**
**விஜிதா பரமேஸ்வரன் (மனைவி)**

---

## மரண அறிவித்தல்



CS28449(16/17)

### இம்மானுவேல் மங்களதாஸ்

(ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபை, நீர்வேலைப்பகுதி ஊழியர்)

யாழ்ப்பாணம் குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும் மருதடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட இம்மானுவேல் மங்களதாஸ் கடந்த (01.10.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (03.10.2019) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு றக்கா வீதியிலுள்ள புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

19/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 691 6193, 077 323 7415**

---

## மரண அறிவித்தல்



### சுப்புக்குட்டி தனநாயகம்

மல்லாகம் கோட்டைக்காட்டை பிறப்பிடமாகவும் மீசாலை வேம்பிராயை வதிவிடமாகவும் கொண்ட பெரியாம்பி என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் கந்தன் சுப்புக்குட்டி இராசம்மா அவர்களின் மூத்த மகன் தனநாயகம் கடந்த (01.10.2019) செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணியளவில் காலமானார்.


அன்னார் சுசிலாதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னதம்பி சின்னத்தங்கைச்சி தம்பதிகளின் மருமகனும் தர்மகுலசிங்கம், பத்மநாதர் (பத்தர்) ஆகியோரின் சகோதரனும் பாஸ்கரன், சுதாகரன் (பானுஜன் - மரக்காலை, யாழ்ப்பாணம்), நந்தீபா, ஜெயபவானி, ஜெனார்தனன் ஆகியோரின் அன்புத்தந்தையாரும் யசோ, ஆனந்தபவானி, சந்திரகுமார் (அவுஸ்திரேலியா), விவேகானந்தன் (சுவிஸ்), சஞ்சிகா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிரோசன், சதுசியன், அபிசன், யன்சிகா, பானுஜன், கஜானன், லோகிதன் (அவுஸ்திரேலியா), கேதகி (அவுஸ்திரேலியா), விதுசன், றோசன், லக்சன் (சுவிஸ்), தோமஸ்எடிசன் (பிரான்ஸ்), இந்துசா, ஆசா ஆகியோரின் பாசமிகு பேரனும் மேசிக்கியாறாவின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று வேம்பிராய் இந்து மயானத்தில் 2.00 மணியளவில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல்: குடும்பத்தினர்**

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 04 . 1950

மறைவு 25 . 09 . 2019

### பொன்னர் செல்லத்துரை

யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட பொன்னர் செல்லத்துரை கடந்த (25.09.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர்-லட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் அச்சுவேலியைச்சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும் கவிதா (சுவிஸ்), கவிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் பிரதீபன் (சுவிஸ்), தரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னம்மா, பரமானந்தம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் கந்தசாமி (கனடா), வேதநாயகம், திசைமலர், நாகரத்தினம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லோகேஸ்வரன் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (கனடா), விமலேஸ்வரன் (இந்தியா), வரதேஸ்வரன் (கனடா), ஜமுனா, கொங்காதேவி, சுரேஸ் (ஜேர்மனி), தவறஞ்சன்,விமலதாஸ், றஜிதா, விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr. சஜீபன் (இங்கிலாந்து), தயாபரன் (இங்கிலாந்து), சுபாஜினி (இங்கிலாந்து), காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் சிறிய தந்தையும் திஷங்க, சேயோன், சேறோன், கினாரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸ்நேரப்படி இன்று (03.10.2019) மாலை 1.00 மணியிலிருந்து மாலை 3.30 மணிவரை இலங்கை நேரப்படி பி.ப 4.30 மணிக்கு BREMGARTEN FRIEDHOF, MURTENST RASSE 55, 3008, BERN, SWITZERLAND எனும் முகவரியில் இடம்பெறஇருப்பதோடு இறுதிக்கிரியைகளை லங்கா ஸ்ரீ Like இல் பார்வையிடலாம். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு, அச்சுவேலி தெற்கு , அச்சுவேலி **தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சியில் அமோக யோகம் பெறப்போகும் ராசிகள் இவை!



ஆண்டுக்கு ஒரு முறை நிகழும் குரு பெயர்ச்சி, இந்த ஆண்டு, அக்டோபர் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம், விருச்சிக ராசியிலிருந்து, தனுசு ராசிக்கு செல்லும் குரு பகவான், தன் சொந்த வீட்டில் அமர்ந்து, அடுத்த ஓர் ஆண்டுக்கு ஆட்சி செய்யப்போகிறார்.

இதுவரை, செவ்வாய்க்கு சொந்தமான விருச்சிக ராசியில் இருந்து வரும் குரு பகவான், தனுசு ராசிக்குள் நுழைவதால் தன் சொந்த வீட்டில் நுழையும் மகிழ்ச்சியிலும், முழு பலத்தாலும் அருளை வாரி வழங்க உள்ளார்.

குருவுக்கான பார்வையாக, 5, 7, 9 ஆகிய இடங்கள் சொல்லப்படுவதால், தனுசு ராசிக்கு 5, 7, 9ஆம் இடங்களில் உள்ள ராசிக்காரர்களுக்கு யோகம் அடிக்க உள்ளது. அதாவது, மேஷ ராசியை 5ஆம் பார்வையாகவும், மிதுன ராசியை 7ஆம் பார்வையாகவும், சிம்ம ராசியை 9ஆம் பார்வையாகவும் குரு பகவான் பார்க்க உள்ளார்.

இந்த ராசிக்காரர்கள் மீது குருவின் பொன்னொளி பார்வை வீச உள்ளதால், குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கிணங்க, இந்த குரு பெயர்ச்சியில், மேற்கண்ட மூன்று ராசிக்காரர்கள் அமோக பலனை பெற உள்ளனர்.

கல்வியில் மேன்மை, நல்ல உத்தியோகம், திருமண தடை நீங்கி விரைவில் திருமணம், சந்தான பாக்கியம், வேலையில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, விருப் பப்பட்ட இடத்துக்குப் பணி இட மாற்றம் உள்ளிட்டவை இனிதே அமையப்பெறும்.

இதுவரை இல்லாத வகையில் திடீர் அதிர்ஷ்டங்கள் உங்கள் வீடு தேடி வரும். எனினும், பல வாய்ப்புகள் காத்துக்கிடப்பதால், உங்களுக்கு உகந்தவற்றை தேடி தேர்வு செய்து கொண்டால் நன்மை பயக்கும்.

# பாதுகாப்பான புலம்பெயர்வில் அரச கடமைதாரர்கள்

**இப்பிரசுரமானது மக்களிடையே பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது.**

**தொடர்ந்து 5 நாட்கள் வெளியிடப்படும் இப்பிரசுரிப்பை வாசித்து பயன்பெறுவதோடு இறுதியில் தரப்படும் போட்டி நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பரிசில்களை வெல்லுங்கள்.**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழே கையாளப்படுகின்றது. புலம் பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது மற்றும் அவர்களது நலன்புரி வேலைத்திட்டங்களிலும் இந்த அமைச்சு ஈடுபட்டு வருகின்றது. இச் சேவைகளை வினைத்திறன் மிக்க வகையில் வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் காணப்படும் பிரதேச செயலகங்களில் இவ்வமைச்சின் கீழ் நியமனம் வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனர்.

இவ்வபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புலம் பெயர் தொழிலாளர்களின் நலனோம்பு வேலைத்திட்டங்கள் தொடர்பாக பணியாற்றுவதோடு. வெளிநாட்டு பணியாளர்களது உரிமைகளை பாதுகாக்கும் வேலைத்திட்டங்களிலும் ஈடுபடுகின்றனர். இவ்வமைச்சினால் பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன

- வெளிநாட்டு பணியாளர்களது நலனோம்பு வேலைத் திட்டங்களை கண்காணித்தல்
- வெளிநாட்டுத் தொழிலுக்கான ஆகக்குறைந்த வயதெல்லையை உறுதிப்படுத்தல்
- பணிப்பெண்களுக்கான குடும்ப பின்னணி அறிக்கையை வழங்கலும் உறுதிப்படுத்தலும் வெளிநாட்டுத் தொழிலுக்கான அனுமதியை வழங்கலும்
- வெளிநாட்டு பணியாளர்களது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான மானியங்களை வழங்குதல்
- பிரதேச மட்டத்தில் வெளிநாட்டுப்பணியாளர்களது தரவுகளை பேணுதல்
- பிரதேச மட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை முன்னெடுத்தல்
- இன்னும் பல சேவைகள் விரிவஞ்சி குறிப்பிடப்படவில்லை

பணிப்பெண்களுக்கான குடும்ப பின்னணி அறிக்கை

வெளிநாட்டில் தொழில் பெற விரும்பும் பெண்ணொருவர் புலம்பெயர்தலுக்கான அனுமதியை பெற்றுக்கொள்ளவதற்காக குடும்ப பின்னணி அறிக்கையினை பெற்றுக்கொள்ளல் அவசியமாகும். இது பெண்களையும் அவர்களுடன் தங்கி வாழ்பவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். இவ்வறிக்கைக்கான விண்ணப்பப் படிவமானது முகவர் நிலையத்திலோ அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமோ பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வறிக்கையினை பெற்றுக்கொள்ளும் போது பின்வரும் 10 உத்தியோகத்தர்களில் பிரதேச செயலாளர் உட்பட சம்மந்தப்பட்ட 5 உத்தியோகத்தர்களது கையொப்பம் இன்றியமையாததாகும். பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், மருத்துவ மாது, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பள்ளி பராய அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அலுவலர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் நன்னடத்தை அலுவலர் ஆகியோரே குடும்ப பின்னணியை ஆராய்ந்து இவ்வறிக்கையில் கையொப்பமிட அதிகாரமளிக்கட்டுள்ள அலுவலர்களாவர். பின்வரும் காரணங்களுக்காக விண்ணப்பிப்பவர் வெளிநாட்டுத் தொழிலுக்கான அனுமதியை பெற்றுக்கொள்ள முடியாது போகலாம்.

- 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை கொண்டிருத்தல்.
- பிள்ளைகளிற்கான உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படாமை
- குடும்ப பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை
- ஊனமுற்ற சுயமாக இயங்க முடியாத பிள்ளைகளோ / தங்கி வாழ்வோர்களோ காணப்படல்
- சிறுநீரக பாதிப்புக்குள்ளான சிறார்களை கொண்டுள்ளவர்கள்
- மருத்துவ ரீதியான உடற்தகுதி பரீட்சிப்பில் தேர்ச்சி அடையாதோர்

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சானது தனக்கு கீழே பின்வரும் இரண்டு முக்கியமான நிறுவனங்களை கண்காணிக்கின்றது.**

- இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம்
- இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழே இயங்கி வரும் இவ்விரு உப அமைப்புக்களும் பல்வேறுபட்ட செயற்பாடுகளையும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன. அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக நாம் கீழே விரிவாக பார்க்கலாம்.

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - Sri Lanka Bureau of Foreign Employment (SLBFE)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆனது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பெற்று செல்வோரின் நலனோம்பு விடயங்களைக் கவனிக்கின்ற அமைப்பாகும். இது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் கண்காணிக்கப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் பெற்று செல்வோர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படும் பயிற்சிகளை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். ஆண்களுக்கு 2 நாட்கள் பயிற்சியும் பெண்களுக்கு 22 நாட்கள் பயிற்சியும் பணியகத்தால் வழங்கப்படும். மேலும் பணிப்பெண்களாக பயணம் செய்பவர்களது குடும்ப பின்னணி அறிக்கையின் அடிப்படையில் அவர்களை வெளிநாட்டு தொழிலுக்கு செல்வதற்கான அனுமதியையும் இவ்வமைப்பு வழங்குகின்றது. தவிர வெளிநாட்டுத் தொழிலுக்காக அனுமதிக்கப்படும் நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு ரூபா 17,837.00 பெறுமதியான பணத்தினை செலுத்த வேண்டும். மேலும் இப்பணமானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 3765 ரூபா செலுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும். அதன் மூலம் பணிக்காக புலம்பெயர்பவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தை சார்ந்த நபர்கள் பின்வரும் நன்மைகளை அனுபவிக்க முடியும்.

- ஆட்கடத்தல்காரரிடம் சிக்கும் சந்தர்ப்பங்களை தவிர்க்கலாம்.
- செல்லவுள்ள நாட்டை பற்றிய தகவல்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.
- சுகாதார காப்புறுதி.
- தொழில் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்தல்.
- செல்லவுள்ள நாட்டிற்கு ஏற்ப பணியாளர்களை தயார்படுத்தல்
- செல்லவுள்ள சில தொழில்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்
- இது தவிர வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் முறையான புலம்பெயர்வை கடவுச்சீட்டில் முத்திரை இட்டு உறுதிப்படுத்துகிறது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறீர்களா? அப்படியாயின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளமான WWW.SLBFE.lk இனை அணுகுவதனூடாகவோ அல்லது தங்களது பிரதேசத்துக்கு பொறுப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அணுகுவதனூடாகவோ மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளமானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவர் போலியானவரா? அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவரா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள கூடிய வசதிகளையும் வழங்குகின்றது. மேலும் இவ்விணையத் தளத்தினூடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அதுமட்டுமல்லாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது தொழில் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கான ஓர் முக்கிய இடமாகவும் திகழ்கின்றது. உத்தியோகபூர்வ முகவர் உங்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு வேலை ஒப்பந்தத்தில் கையொப்பமிட அழைத்துச் செல்வார். இதன் மூலம் போலியான முகவர்களின் மோசடி நடவடிக்கைகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.


### இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம்
### Sri Lanka Foreign Employment Agency (SLFEA)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் செயற்படும் உப நிறுவனங்களில் ஒன்றான இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் வெளிநாட்டுத் தொழில்களுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இது வெளிநாட்டு வேலைவாய்ப்பை தேடுவோருக்கு வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குவதை தலையாய நோக்கமாக கொண்டியங்கும் நிறுவனமாகும். தனியார் முகவர் நிலையங்களது நற்சாட்சிப் பத்திரங்களை கவனமாக பரிசீலித்து அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இவ்வமைப்பே இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையை ஒழுங்கமைக்கும் ஓர் அமைப்பாகவும் காணப்படுகின்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் செயற்பாடுகளையும் இவ்வமைப்பே கண்காணித்து வருகின்றது.

இன்றைய விடயப்பரப்பு நிச்சயமாக உங்களுக்கு பிரயோசனமான ஒன்றாக அமைந்திருக்கும் என்ற நம்பிக்கையோடு நாளை சரியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களை இனங்காண்பது தொடர்பாக அறிந்து கொள்வோம் . தொடர்ந்து இந்த ஒருவாரமும் எம்முடன் இணைந்திருப்பதனூடாக ஒவ்வொரு வாரமும் பெறுமதியான பரிசில்களை வெல்லும் வாய்ப்பை பெறுவதோடு. கீழே தரப்படும் குறுக்கெழுத்து புதிருக்குரிய விடைகளை கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புவதனூடாக. நாளொன்றுக்கு தெரிவு செய்யப்படும் 20 அதிர்ஷ்டசாலிகள் வெற்றியாளர்கள் 500 ரூபா பெறுமதியான பரிசினை வெல்லும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன். கீழே கட்டமிட்ட பகுதியில் காணப்படும் கேள்விக்கான விடையை கீழ்க்காட்டப்பட்ட SMS வடிவத்தில் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் சரியான விடைக்குரியவர்கள் 200 ரூபா பெமதியான தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்ல முடியும். போட்டி இறுதி திகதியின் பின்னர் தெரிவ செய்யப்பட்ட வெற்றியாளர்கள் பத்திரிகையில் அறியத்தரப்படுவார்கள்.

வெளிநாடு செல்வது தொடர்பாக அல்லது முறையற்ற வெளிநாட்டுப் பயணத்தால் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான உதவித் திட்டங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் பினவரும் தொலைபேசி இலக்கத்தினூடாக அழைத்து விபரங்களை பெறமுடியும் 0774410086

### குறுக்கெழுத்து போட்டி



**இடமிருந்து வலம்**

1. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ்பணி புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எந்த அலுவலகத்தில் கடமை ஆற்றுகின்றனர்?
5. வெளிநாட்டுத்தொழிலுக்கு செல்லமுன்னர் கைச்சாத்திட வேண்டிய முக்கியமான ஆவணம்
9. இவ்வலுவலர் குடும்ப பின்னணி அறிக்கையில் கையொப்பமிட அதிகாரமளிக்கப்பட்ட ஒருவராவார் (தலை கீழாகவுள்ளது)
10. மத்திய கிழக்குக்கு தொழிலுக்காக புலம் பெயரும் ஆண்களுக்கு ................ நாட்கள் பயிற்சி வழங்கப்படும்

குடும்ப பின்னணி அறிக்கை இவர்களுக்கு வழங்கப்படும்?

**மேலிருந்து கீழ்**

1. பணிப்பெண்களாக புலம் பெயர்பவர்கள் குடும்ப .......அறிக்கையை பெற்றிருத்தல் அவசியமாகும்.
2. தொழில் ஒப்பந்தங்கள் இலங்கை வெளிநாட்டு ...........பணியகத்தில் கைச்சாத்திடப்படும்.
3. www.slbfe.lk என்பது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் .......... ஆகும்.
4. முகவர்களுக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ....... நிலையத்தால் வழங்கப்படும்.
6. மத்திய கிழக்குக்கு தொழிலுக்காக புலம் பெயரும் பெண்களுக்கு ......... நாட்கள் பயிற்சி வழங்கப்படும்
7. குடும்ப பின்னணி அறிக்கையில் கையொப்பமிடவேண்டிய ஆக குறைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை. எவ்வளவு?
8. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் அலுவலகத்தின் பணிகளில் ஒன்று............ ம் ஆகும்.

குறுக்கெழுத்து போட்டிக்கான விடைகள் வந்து சேரவேண்டிய இறுதி திகதி 11.10.2019

குறுக்கெழத்துப்போட்டிக்கான விடைகள் புத்திரிகையில் கட்டத்தினை வெட்டி அனுப்பலாம் அல்லது சுயமாகத் தயாரிக்கப்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

எந்த வயதுப்பிரிவினரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

கடித உறையின் இடது மூலையில் குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகள் - (அன்றைய திகதி) எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

பின்வரும் விபரங்களையும் விடைகளுடன் இணைத்து அனுப்பவும்

பெயர்:
வயது:
பால்:
முகவரி

தொலைபேசி இலக்கம்(சிறுவர்களாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்)

**அனுப்ப வேண்டிய முகவரி : IOM**
**இலக்கம் 139,**
**கோயில் வீதி, நல்லூர்.**

தங்களது நெருங்கிய நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தங்களை வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா வீசாவில் செல்லுமாறும் அங்கு கிடைக்கக் கூடிய ஏதாவது வேலையை கொஞ்ச நாட்கள் வேலைக்கான அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக செய்யுமாறும் கூறுகிறார் இது ஒரு முறையான / பாதுகாப்பான புலம்பெயர்வு என தாங்கள் நினைக்கிறீர்களா?

ஆம்
இல்லை

இக்கேள்விக்கான பதிலை கீழ்க்குறிப்பிட்ட முறையில் IOM ன் நேரடி தொலைபேசி இலக்கமான **0774410086** க்கு SMS /குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக ரூபா200 பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளை குலுக்கல் முறையில் வெல்லவும்.

SMS /குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய வடிவம்

பால் வயது இடம் விடை ---------------------------------------------- 0774410086

உதாரணம்
M_14_Jaffna_Answer
ஆண்_14_யாழ்ப்பாணம் _ சரியான விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.10.2019 | வெற்றி வாரம் 2635 | வர்ணம் பச்சை
தனுசு
வெற்றி இலக்கங்கள் 01 05 22 27
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,635,888/=
03.10.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824924 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 749
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.10.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,348,790/-
வெற்றி இலக்கங்கள் 02 04 55 60 X
விசேட வெற்றி இல. 6864
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3243 திகதி: 2019.10.02
புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 06 11 40 41 E
போனஸ் இலக்கம் 57
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 63,189,150/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## பதில்...

சொலிஸிட்டர் ஜெனரல் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்கவை அவரது பதவியில் இருந்து உடனடியாக இடைநிறுத்த பொதுச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்திருந்த நிலையில் இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.

சொலிஸிட்டர் ஜெனரல் பதவியிலிருந்த இவர், அவன் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தார். இவ்வுரையாடல் சர்ச்சைக்குள்ளானதையடுத்தே இவர் இடை நிறுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணை நடத்துமாறு சட்ட மா அதிபர் டப்புல டி. லிவேரா பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடம் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

### வகுப்புக்கள் ஆரம்பம்
சிங்களம் இரண்டாம் மொழி (க.பொ.த) சா.த பரீட்சை வினாவிடை வகுப்புக்கள் வல்வெட்டித்துறையில் ஆரம்பம்.
077 711 5876

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌர குடும்ப, 1983 இல் பிறந்த சூரியன் செவ்வாய் 10 இல் பா.கிர. 15½ இடப ராசி, றோகினி நட்சத்திரம் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. (CS/28436)
0770634154

### தேவை
- களஞ்சியக்காப்பாளர்
- கணக்காளர்
- மில் வேலை தெரிந்தவர்கள்

தேவை
தொடர்புக்கு 077 772 2215

## வெளிநாட்டு...

தற்போதுள்ள இருதரப்பு உடன்பாடுகளின் கீழ் இலங்கைக்கான சேவைகளில் ஈடுபடும் வெளிநாட்டு வானூர்தி நிறுவனங்கள், உள்நாட்டு வானூர்தி நிலையங்களுக்கு போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது.

எனினும், வெளிநாட்டு வானூர்தி நிறுவனங்கள், உள்நாட்டு வானூர்தி நிலையங்களுக்கு சேவையை நடத்துவதற்கு ஓர் ஆண்டு செயற்பாட்டு அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகாரசபைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம், மத்தல பன்னாட்டு வானூர்தி நிலையங்கள், மட்டக்களப்பு, இரத்மலானை வானூர்தி நிலையங்களுக்கு வெளிநாட்டு வானூர்தி நிலையங்கள் சேவையில் ஈடுபட முடியும். சிறிய வானூர்திகளைப் பயன்படுத்தி இந்திய வானூர்தி நிறுவனங்கள் யாழ்ப்பாணம் வானூர்தி நிலையத்துக்கான வானூர்தி சேவைகளை ஆரம்பிக்கும் என்று இலங்கை எதிர்பார்க்கிறது. இந்த நிறுவனங்களுக்கு அரசின் அனுமதி பயனுள்ளதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. (ஓ.5)

Dialog MEGA அதிஷ்டம்
சனிக்கிழமை இரவு 7.56 க்கு சக்தி TV ஊடாக
வெற்றியாளர்கள்



ரூ. 10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர் W.M. சுமதிபால - மொனராகலை
S. சுசந்த திஸ்ஸமஹாராம
S. விக்னேஷ்வரி கிறேன்பாஸ்
A.U. ரதவத்த கண்டி
K.A.D. தர்மதாச வெலிகம

இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ. 10,384,616/-

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- இரண்டு கோடி வென்ற வெற்றியாளர் ஒருவர்
- ஒரு கோடி வென்ற 23 வெற்றியாளர்கள்
- 20 இலட்சம் வென்ற 10 வெற்றியாளர்கள்
- 10 இலட்சம் வென்ற 190 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 1150 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் பிரமாண்டமான பரிசுக்குவியல்
#121# டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

இலங்கையின் பிரபலமான தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
2019
Dialog
an axiata company www.dialog.lk எதிர்காலம் இன்றே.

கோடிபதி கப்றுக
சீட்டிழுப்பு வாரம்: 502 திகதி: 2019 ஒக். 01
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்
S 06 33 41 53
வாசி 6 5 1 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 142,100,633/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT



October 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம்
- பகுதி நேர / முழு நேர கற்கை நெறி
- படிக்கும் போதே வேலை வாய்ப்பு
- கல்விக்கான வங்கிக் கடன் வசதிகள்
- புலமைப்பரிசில்கள் மற்றும் சலுகைகள்
- படித்து முடித்ததும் 100% வேலை வாய்ப்பு

G.C.E O/L உடன்
TUTION FEE 30,000/- ONLY
CTHI
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0760579999 | 0213146171

G.C.E. (O/L) 2019
REVISION & PAPER CLASSES
வரலாறு
ஆசிரியர்: R.S. சந்திரன்
ஆரம்பம் 05.10.2019
சனிக்கிழமை பி.ப 5 மணி
குறிப்பு
1. ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
2. குறித்த காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கை அலகுகள் முழுமையாக மீட்கப்படும்.
3. அனுமதிகளை உரிய கல்வி நிலையங்களில் பெற்றுக் கொள்ளவும்
றோயல் அக்கடமி
நாவலர் றோட், நல்லூர் | அரசடி றோட், யாழ்நகர்
0776649134
மொடேன்மற்ஸ் அக்கடமி
பிரதான வீதி, சண்டிலிப்பாய்
0778175822

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 284
சீட்டிழுப்பு திகதி 2.10.2019 நீலம்
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 16 49 67
விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 44, 751, 124/=
04.10.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18வது கோடீஸ்வரர் உட்பட ஏராளமான வெற்றியாளர்கள்

## அத விசேட கோடிபதி

ADA KOTIPATHI



அக்டோபர் 01ம் திகதி அத விசேட கோடிபதி சீட்டிழுப்பில்

**ஐந்து கோடியே ஐம்பத்தி ஒன்பது இலட்சம் ரூபாய்**

18வது கோடீஸ்வரர் வெற்றியாளரை உருவாக்கிய விற்பனை முகவர்

**திரு. பி. பிரதீபன் – மட்டக்களப்பு**

பத்து இலட்சம் ரூபாய் வெற்றியாளரை உருவாக்கிய விற்பனை முகவர்

**திரு. அகுரணகே ஜயவர்தன – புலத்கொபிட்டிய**

### பிரதான சீட்டிழுப்பில் இலட்சாதிபதிகள் 14

| விற்பனை முகவர் | பிரதேசம் |
|---|---|
| திரு. ஏ.அய்.கே. ராமநாயக்க | கொட்டஞ்சேனை |
| திரு. ஈ.கே. பிரேமசிறி | கொழும்பு 01 |
| திரு. டீ. சுகுனபால | வெல்லம்பிடி |
| திரு. டி.ஜீ. சுமித் நிஷாந்த | கண்டி |
| திரு. டபிள்யூ. ஏ.பி.பி. அலெடீன் பெரேரா | திகன |
| திரு. வீ. நடராஜா | யாழ்ப்பாணம் |
| திரு. பி. பிரதீபன் | மட்டக்களப்பு |
| திருமதி. ஜானகி ஹெமலதா | கொகரெல்ல |
| திரு. டி.எம்.டீ.பி. பீரிஸ் | மாரவில |
| திரு. எம்.பி. ஜினசேன | கொலன்னாவை |
| திரு. எச்.வீ.டீ.ஐ. உனம்புவ | மாவனெல்லை |
| திரு. கே.பி.எஸ். ஜயதிலக | யடியந்தொட்ட |
| திரு. பீ.ஜே.ஏ. புஸ்பகுமார பெரேரா | மினுவங்கொடை |
| திரு. கே. திலக்கரத்ன | நீர்கொழும்பு |

### விசேட சீட்டிழுப்பு

ரூ. மூன்று இலட்ச தங்க ஆபரண தொகுதி வெற்றியீட்டிய இலக்கங்கள் **204791**

| விற்பனை முகவர் | பிரதேசம் |
|---|---|
| திரு. எஸ்.கிஷோகுமார் | யாழ்ப்பாணம் |
| திரு. நிஹால் ரத்னமலல | இப்பாகமுவ |
| திரு. கே.ஜீ.ஏ. அன்டனி | வெலிவேரிய |
| திருமதி. என். பிரியங்கிகா களுதந்திரி | கன்னோருவ |
| திரு. எச்.எம். விஜேதுங்க | தெஹியத்தகண்டிய |
| திருமதி. கே.ஏ.நிலுகா பெர்னான்டோ | வல்லோரவத்த |
| திரு. பீ.என்.பெர்னான்டோ | வாழைத்தோட்டம் |
| திரு. எச்.எம்.டபிள்யு. விஜேசிங்க | தல்துவ |
| திரு. கே.ஜீ. தம்மரத்ன | கொழும்பு மத்தி |
| திரு. டபிள்யு சிறியாரத்ன | பெலவத்தை |
| [illegible] | காலி |

ஒரு இலட்சம் பெறுமதியான பரிசை வெற்றியீட்டிய இலக்கங்கள் **841184**

| விற்பனை முகவர் | பிரதேசம் |
|---|---|
| திரு. ஏ.எஸ்.பிரேமரட்ன | ஹெட்டிபொல |
| திரு. ஆர்.கே.ஜே. ராஜபக்ஷ | வெலிவிட |
| திருமதி. நிலுகா ஜயசேகர | காலி |
| திரு. சம்பத் பீ. ரணசிங்க | நுகேகொட |
| திரு. ஜீ.எம்.ஆர். பிரேமசிறி | நடமாடும் விற்பனை |
| திரு. டபிள்யு. ஏ.ஏ.டி. எல். சுஜீவ | வத்தளை |
| திரு. எம்.கே. விஜேரத்ன | அரநாயக்க |
| திரு. கே.வீ. ரூபசிங்க | ஹிந்தகல |
| திரு. ஜீ. ஏ. சந்திரசிறி | ரண்முதுகல |
| திரு. எச். சீ. பிரேமசிறி | கொழும்பு 12 |
| திரு. ஜீ.எம். டபிள்யு. அபோன்சு | நிகவரெட்டிய |

நிதி அமைச்சு – அபிவிருத்தி லொத்தர் சபை | www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA.

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Pathway for Health Assistant Changing Room, Fixing Barriers for Hospital Gates, Repairing of Medical Ward Staircase and Renovation of Skin Clinic | 500.00 | 40,000.00 | 91 | 1.9 | C9 |
| 2. | Toilet Renovation at Ward No 23A | 500.00 | 32,000.00 | 91 | 1.5 | C9 |
| 3. | Aluminium and Cubical Partition for Cardiothoracic Ward and Fixing Glass work for Rehabilitation Unit | 500.00 | 25,000.00 | 91 | 1.2 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligiblefor contractaward, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing vaild registration book and receipt for the cash payment for the bid fee from 04.10.2019 up to 22.10.2019 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 23.10.2019, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
Regional Procurement Committee,
Teaching Hospital,
Jaffna.
03.10.2019

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி நேருஜா லியோன் அவர்களின் பாசமிகு தந்தையார் **இம்மானுவேல் மங்களதாஸ்** அவர்கள் 01.10.2019 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த செய்திகேட்டு துயரடைந்தோம். அவரது இழப்பினால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்- யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 01 . 1936



இறப்பு 01 . 10 . 2019

### முத்துக்குமாரு சண்முகசுந்தரம்

(இளைப்பாறிய யாழ். மாவட்ட முகாமையாளர் - இலங்கை வங்கி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ். பிறவுண் வீதி மற்றும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சண்முக சுந்தரம் (இளைப்பாறிய யாழ். மாவட்ட முகாமையாளர் - இலங்கை வங்கி) 01.10.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் முத்துக்குமாரு - தையலம்பாள் தம்பதியரின் புத்திரனும், கோவிந்தராஜா-கௌரியம்மாதம்பதியரின்மருமகனும், சண்முகராணியின் அன்புக் கணவரும், பார்த்திபன், ஜெயஸ்ரீ, சாருமதி, ஸ்ரீகுமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரூபி, ஜெயகரன், தனுஷா ஆகியோரின் அன்பு மாமனும், ரம்யா, மதுரா, சேந்தன், பிரவீன், ஆதர்சினி, ஆரபி, அபிஷா, அனிஷா ஆகியோரின் அன்பு பேரனும், செண்பகலெட்சுமி, காலஞ்சென்ற திவ்வியமணி, ரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா, ஜெகதீசன், ஜெகநாதன், ஜெகன்மோகன், சந்திரமோகன், ராஜமோகன், தேவிகாராணி, சந்திரகலா, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.10.2019) வெள்ளிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**011 272 2265, 071 856 0319**

## மரண அறிவித்தல்

'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்' (பிலிப்பியர் 1:21)

மலர்வு 08 - 09 - 1934



உதிர்வு 01 - 10 - 2019

### யோசேப்பு (சடையன் ஜோர்ஜ்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட காலஞ்சென்ற யோசேப் - மாதி தம்பதியரின் அன்பு மகனும் கர்த்தருக்குள் நித்திரையடைந்த றோசம்மாவின் கணவரும் மரியம்மா, நீக்கிலாஸ் (இந்தியா), தேவசகாயம் (கனடா),அந்தோனி (வவுனியா), டேவிற்(டென்மார்க்), பிரான்சிஸ் (சுவிஸ்), லூர்த்தம்மா, டானியல் (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லூயிஸ் அந்தோனி, மரியகன்னி(இந்தியா), சித்திரா (கனடா), சந்திராதேவி, சிந்து (டென்மார்), பதுமநிதி (சுவிஸ்), சவரிமுத்து, புஸ்பமேரி (கொலண்ட்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(03.10.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பின் ஓடக்கரை வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/28437)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மக்கள், ம[illegible]
பேரப்பிள்ளைகள், பூ[illegible]
0776000542

## மரண அறிவித்தல்



### சரஸ்வதி கந்தசாமி

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பரந்தன் குமரபுரம், உரும்பிராய் என்பவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி கந்தசாமி நேற்று (02.10.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - இளையபிள்ளை தம்பதியரின் மூன்றாவது புதல்வியும், காலஞ்சென்றவர்களான சரசாலை சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், கண்மணி, அப்பாத்துரை, அன்னம்மா, பொன்னம்மா, சபாரத்தினம், தியாகராசா, பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், அருந்தவராசா, அருந்ததி (ஜேர்மனி), கிருபாசக்தி (பாப்பா), சிவானந்தன் (ராசன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், கண்மணிதேவி, தியாகேஸ்வரன், ஈஸ்வரநாதன் (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்), வசந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அபிராமி, காயத்திரி, மதிசூதனன், பிரபா, ரேக்கா, ஜெனகன், பிரதீப், துஷ்யந்தி, துசித்திரா, துஷ்யந்தன், துவாரகன், தர்ஷிகா, நிதர்சன், சாருகா ஆகியோரின் பேர்த்தியும், நிதர்சன், தனுப்பிரியன், திவ்வியன், அக்ஷை, சூர்யா, சியான், கரிஸ், அஜய், டிவ்வியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2019) வெள்ளிக்கிழமை உரும்பிராய் மேற்கில் உள்ள அவரது மகள் கிருபாசக்தி ஈஸ்வரநாதன் அவர்களின் இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் அடக்கம் செய்யப்படும்


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஆனந்தபவனம்"
கருணாகரப்பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய் மேற்கு.

தகவல்:
அ. ஈஸ்வரநாதன்
அபிராமி, விஜயதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 . 06 . 1947

மறைவு 13 . 10 . 2018

### அமரர் கந்தையா பஞ்சலிங்கம்

**திதி– புரட்டாதி மாதத்து பூர்வபக்க பஞ்சமி (03.10.2019) வியாழக்கிழமை**

ஆறாத் துயரில் ஆண்டொன்று ஆனதே....
பாழாய் போன நோயினால்
உன் பாசங்களைத் தவிக்கவிட்டு
இறைவனடி சேர்ந்தீரே ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

C11389(16/17)

குடத்தனை வடக்கு, குடத்தனை.

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் படைவீரசிங்கம் சேனாதிராசா

மண்ணில் 10 . 03 . 1951

விண்ணில் 24 . 09 . 2017

**திதி : பூர்வபட்ச பஞ்சமி**

நிஜமாக நீங்கள் மறைந்து
ஆண்டுகள் இரண்டு ஆனதோ !
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ !
உங்களை நினைத்து – தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் – ஐயா
உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்.




என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி

விழிசிட்டி,
தெல்லிப்பழை.

(CS 28441) (14.17)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை நல்லசேகரம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நல்லசேகரம் நேற்று (02.10.2019) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னம்மா தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் நாகநிரஞ்சனி, நிமலவாகினி, ஸ்ரீவராகினி, நர்த்தனி ஆகியோரின் தந்தையும் மகேஸ்வரன், சந்திரகுமார், மகிந்தன், கஜேந்திரன் (ஐயாகுட்டி) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் கோபாலபிள்ளை மற்றும் சிவசோதிஅம்மா, இரத்தினாம்பாள் குணசிங்கம், சந்திராதேவி சண்முகநாதன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் சிவசோதி, இராஜேஸ்வரி, ஆனந்தசோதி, ஞான பண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாமஈஸ்வரி, திருவருட்செல்வன், ஆகியோரின் மைத்துனரும் பவித்திரா, துஷானி, கஜானி, திவ்ஜானி, ரூபிஷானி,ஷானுஜன், ஐதுஷானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2019) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 600 1553**

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 05 . 1947

மறைவு 30 . 09 . 2019

### V.K. கானமூர்த்தி நாகலட்சுமி

கோண்டாவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட V.K கானமூர்த்தி நாகலட்சுமி (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணசாமி - கிருஸ்ணாம்பாள் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கோதண்டபாணி - இராஜேஸ்வரி தம்பதி களின் அன்பு மருமகளும் நாதஸ்வரச்சக்கரவர்த்தி V.K. கானமூர்த்தியின் அன்பு மனைவியும் மோகனாங்கி, தவில்வித்துவான் கண்ணதாசன் (கொலண்ட்), நாதஸ்வர வித்துவான் கிருஸ்ணதாசன், சந்திரசேகர் (கனடா), காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நயினாம்பிகையின் சகோதரியும் ராம்குமார், (ஆசிரியர், கோண்டாவில் இந்துக்கல்லூரி), நந்தினி (கொலண்ட்), ராஜராஜேஸ்வரி (கனடா), நாதஸ்வரச்சக்கரவர்த்தி P.S. பாலமுருகன் ஆகியோரின் மாமியாரும் நாதஸ்வரமேதை V.K. பஞ்சமூர்த்தி, ஆனந்தவல்லி, தவில்வித்துவான் விஜயமூர்த்தி ஆகி யோரின் மைத்துனியும், லக்ஷிகா, வர்ஷிகா, சாரங்கன், தரங்கினி, சரண்ஜன், நிஸ்கலன், நிபூஷன், விபூசன், ஹாசினி, ஹம்சினி, காணஸ்வரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**V.K. கானமூர்த்தி குடும்பத்தினர்**
**V.K. பஞ்சமூர்த்தி குடும்பத்தினர்**
**V.K. விஜயமூர்த்தி குடும்பத்தினர்**
**K.R. சுந்தரமூர்த்தி குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று பன்னாட்டு நல்லொழுக்க நாள் அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



# நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்குவோம்


■ க.ஆ.குலநாதன்

மனிதர்கள் மனிதர்களாக வாழ பழகிக் கொள்ள வேண்டும். ஆனால் மனிதர்கள் தெய்வமாகவும் வாழலாம். தெய்வமாக போற்றப்படுவர்களாகவும் வாழலாம். தெய்வமாகவும், தெய்வமாக போற்றப்படும் மனிதர்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்தவர்களும் உண்டு. வாழ்கின்றவர்களும் உண்டு. அதைப் புரிந்தவர்களும், புரியாதவர்களுமாகத்தான் இன்று மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

தெய்வமாக வாழ்ந்தவர்களும், தெய்வமாக போற்றப்பட்டவர்களும் விதிவிலக்காக சிலபேர்களே! ஆனால் மனிதன் தெய்வமாக வாழ்வது கட்டாயமல்ல. மனிதன் மனித தன்மையுடன் மனிதனாக வாழ வேண்டும். அதைவிடுத்து மனிதன் அசுரத்தன்மைகொண்ட, மிருகத்தன்மை கொண்ட, வன்முறைகொண்ட, பஞ்சமாபாதகங்களை செய்து கொண்டு வாழும் மனிதர்கள் மனிதத் தன்மை கொண்ட மனிதர்கள் அல்ல.

இன்றைய எமது சமூகம் குறிப்பாக இளம் சமுதாயம் மது, போதைப்பொருள்கள் பாவனைக்கு உள்ளாகி மனிதத் தன்மையற்று வன்முறைகளில் ஈடுபட்டு தங்களையும், தங்கள் சமூகத்தையும் அச்சுறுத்தி அழித்து வருகின்றது. மனிதப் பண்பு குறைந்து சுயநலமும், சுகமாக கூடியபணம் சம்பாதிக்கும் வழியைப் பின்பற்றி முறைகளை கையாளவும், தன் விருப்பங்களை நிறைவு செய்யவும் வன்முறைகளைப் பாவித்து மற்றய மனிதர்களை தாக்கி தங்களை பிரபல்யப்படுத்தும் காலமாக மாறிவருகின்றது.

இந்தத் தன்மை கொண்ட மனிதர்களை உருவாக்குவதில் மது, புகை, போதைப்பொருள் பாவனை மிகவும் தூண்டலாக அமைகின்றது.



இந்தப் பாவனையைத் தூண்டி எம் சமூகத்தை அழிக்கும் செயற்பாடுகளில் சிலபேர் திட்டமிட்டு செயற்பட்டு எதிர்காலச் சமூகத்தை அழிக்க முனை கின்றார்கள். மற்றய சிலபேர் சுலபமாக பணம் சம்பாதிப்பவர்களாக இந்தப் பாவனையை பழக்கத்துக்கு உள்ளாக்கி அவர்களை இந்தப் போதைப்பொருள்களுக்கு அடிமையாக்கி தங்கள் வியாபாரத்தையும், தங்கள் வருவாயையும் பெருவாரியாக பெருக்கிக் கொள்கின்றார்கள்.

தங்கள் வருவாயோடு எம் சமூகம் அறிவற்ற சமூகமாக, நோய்க்கு உள்ளாகும் சமூகமாக, வறுமையில் தாண்டவமாடி எதிர்கால வாழ்வை அழித்து, எதிர்காலச் சந்ததி அறிவுபூர்வமுள்ள, தேரோக்கியமுள்ள, மகிழ்ச்சியான சமூகத்தை இழந்து வருவது அவர்களுக்குத் தெரியவில்லை. சுயநல போக்கால் செயற்பட்டுத் தங்கள் எதிர்காலச் சந்ததியை இழந்து வருவதை மனிதநேயம் கொண்டு சிந்திக்க முடியாமல் வாழ்ந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது.

இன்று போதைப்பொருள்களுக்கு எதிரான சட்டங்களையும், செயற்பாடுகளையும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படுத்தி வந்தாலும் போதைப் பொருள் விற்பனையாளர்களதும், உற்பத்தியாளர்களதும் செயற்பாடுகள் பணத்தாலும், அதிகாரத்திலும் இவற்றை முறியடித்து, இப்பொருள்களை பாவனைக்கு தூண்டி பாவனையாளர்களை அதிகரித்து வருகின்றார்கள். இதனை எம் சமூகம் உணர்ந்து விழிப்புடன் செயற்படவேண்டும்.

இளம் கன்று பயமறியாது என்பதற்கமைய எதையும் செய்து பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் உள்ள இளம் சமூகத்திடையே போதைப் பொருள்களை மிகஇலகுவாக பழக்கப்படுத்தி வருகின்றார்கள். அத்தோடு இன்று மிகவும் வேதனைக்குரிய விடயமாக பாடசாலை மாணவர்களிடையேயும் இந்தப் பொருள் பாவனை பழக்கத்தை உருவாக்குவதில் மிகவும் விவேகத்துடன் செயற்பட்டு, அவர்களை அடிமையாக்கி தங்கள் விற்பனையை பெருக்கி வருகின்றார்கள்.

இன்றைய மாணவர்கள் ஆற்றல் படைத்த தலைவர்களாக, மனிதர்களாக வாழ்வதை இப்பழக்கம் பூண்டோடு அழித்து வருகின்றது. மது, புகை, போதைப் பொருள் பாவனையைப் பழகாதவர்களை பழகாமல் தடுப்பதையும், பழகியவர்களை அதிலிருந்து விடுபடச் செய்வதும் எங்களது ஒவ்வொருவர்களின் கடமையாகும். போதைப்பொருள்களுக்கு உள்ளாகமல் நாங்கள் இருந்தாலும் எங்கள் பிள்ளைகளை பழகாமல் தடுத்து விடுவோம் என்ற நம்பிக்கையோடுதான் வாழ்ந்து வருகின்றோம். ஆனால் மது, புகை, போதைப்பொருள் உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் தங்கள் அறிவையும், பணத்தையும் செலவு செய்து எம் சமூகத்தின் அறிவை அழித்து பணத்துக்காக தங்கள் குணத்தையும் மாற்றி வேகமாக தந்திரோபாயமாக செயற்பட்டு வருகின்றார்கள். இதிலிருந்து எங்கள் பிள்ளைகளையும், சமூகத்தையும் விலக்கிவிடுவது என்பது ஒரு சவாலாகவே அமைந்து வருகின்றது.

பழக்கத்தை தூண்டுபவர்களும், பழகியவர்களும் பாவனைக்கான சாதகமான அறிவுரைகளை மற்றவர்களுக்கு வழங்குவதோடு இதன் பாதிப்புக்கள் தெரிந்தும் இதனை தடுப்பதற்கு சாத்தியமான பலசெயற்பாடுகள் இருக்கின்றபோதும் சாத்தியப்படாத செயற்பாடுகளை மற்றவர்கள் செயற்படுத்தலாம் எனக்கூறி விலகியே செயற்பட்டு வருகின்றார்கள்.

**மக்களாகிய நாங்கள் மனிதர்களாக மனிதநேயத்துடன் வாழவேண்டும் எனும் சிந்தனையை எப்போதும் எம்மனதில் பதித்து மது, புகை, போதைப்பொருள் பாவனையிலிருந்து எம்மையும், எம்சமூகத்தையும் காப்பாற்றி மது, புகை, போதைப்பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்குவோம் என்று சபதம் எடுத்து இன்றைய நாளிலிருந்து செயற்படுவோம் என்று உறுதிசெய்வோம்.**

மக்களாகிய நாங்கள் மனிதர்களாக மனிதநேயத்துடன் வாழவேண்டும் எனும் சிந்தனையை எப்போதும் எம்மனதில் பதித்து, மது, புகை, போதைப்பொருள் பாவனையிலிருந்து எம்மையும், எம்சமூகத்தையும் காப்பாற்றி 'மது, புகை, போதைப்பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்குவோம் என்று சபதம் எடுத்து, இன்றைய நாளிலிருந்து செயற்படுவோம் என்று உறுதிசெய்வோம்.

போதைப் பொருள்களை பழகாதவர்களை இதில் உட்புகாது தடுத்தலையும், பழகியவர்களை அதிலிருந்து விடுபடச் செய்வதற்கான விழிப்புணர்வுகளை கல்விச் சமூகமும், சமூக அமைப்புக்களும் மற்றும் அரச நிர்வாகமும் செயற்படுத்தி மது, புகை, போதைப்பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் செயற்பட்டு எம் சமூகத்தை காப்பாற்றி வெற்றிகாண்போம்.

நல்லாக (மிதமிஞ்சிய பணத்துடன்) வாழ்வதைவிட நல்லவர்களாக (நல்லொழுக்கத்துடன்) வாழ்வதே சிறப்பு.

கட்டுரையாளர்:
செயலர்,
வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கோத்தாவின் எதிர்காலமும் இலங்கையின் நீதியும்

அரசதலைவர்பதவிக்கானபொதுமக்கள்முன்னணிவேட்பாளரான கோத்தபாய ராஜபக்ச இரட்டைக்குடியுரிமையைப் பெற்றுக்கொண்டமை தொடர்பான சர்ச்சை அவரது தலைமைக் கனவுக்கே வேட்டுவைத்துவிடும் போன்று தோன்றுகின்றது.

இலங்கையின் தேசிய அடையாள அட்டையையும் கடவுச்சீட்டையும் பெற்றுக்கொள்வதில் கோத்தபாய ராஜபக்ச முறைகேடாகச் செயற்பட்டார், பொய்த் தகவல்களை வழங்கினார் என்று தெரிவித்து அவருக்கு எதிராக பேராசிரியர் தெனுவர, காமினி வியன்கொட ஆகியோர் தாக்கல் செய்துள்ள வழக்கு கோத்தபாயவின் கழுத்தை இறுக்கத் தொடங்கிவிட்டது.

மற்றெந்தவழக்கையும்விட இந்தவழக்கிலிருந்து கோத்தபாய தப்பிவிட முடியாது என்றே சட்டவல்லுநர்கள் மற்றும் அரசியல் அவதானிகள் ஆழமாகக்கருதுகின்றனர். ஏனெனில் இந்த வழக்கில் கோத்தபாய ராஜபக்ச குடியுரிமைச் சட்டம் மற்றும் குடிவரவு, குடியகல்வுச் சட்டம் என்பவற்றை மீறியுள்ளமை அப்பட்டமான உண்மை என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தக் குற்றங்களுக்காக அவர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு முட்டுக்கட்டை வரவில்லை என்றால் கூட, கோத்தபாயவுக்கு தண்டனை நிச்சயம் கிடைக்கும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

கோத்தபாய ராஜபக்ச 1976ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் நாள் தனது முதலாவது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். அப்போது அவர் இலங்கைக் குடிமகன். 1949ஆம் ஆண்டு பிறந்த கோத்தபாயவுக்கு அந்த அடையாள அட்டையின் அடிப்படையில் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு கோத்தபாய அமெரிக்கக்குடியுரிமையைப் பெற்றுக்கொண்டார். இலங்கைக் குடிமகன் ஒருவர் வேறொரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ளும்போது அவரது இலங்கைக்குடியுரிமை தானாகவே வலுவற்றதாகிறது என்கிறது சட்டம். அதன்படி 2003ஆம் ஆண்டில் தனது இலங்கைக் குடியுரிமையை கோத்தபாய இழந்தார்.

2005ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆம் திகதி இலங்கையின் அரச தலைவராக மகிந்த ராஜபக்ச பதவியேற்கிறார். குடும்பத்தில் கோத்தபாயவுக்கு மூத்தவர் இவர். அவர் பதவியேற்று மூன்றே நாள்களில் கோத்தபாயவுக்கு மீண்டும் இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதாவது கார்த்திகை 21ஆம் நாள் கோத்தபாய மீண்டும் இலங்கையின் குடிமகனானார். அதேசமயம் அவர் அமெரிக்கக் குடியுரிமையையும் தன்வசம் கொண்டிருந்தார்.

மகிந்தராஜபக்ச அரசதலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டது ஒரு வெள்ளிக்கிழமை. அதற்கு அடுத்த வேலை நாளான திங்கட்கிழமையே அவருக்கு மீண்டும் இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டுவிட்டது. இடையில் சனி, ஞாயிறு தினங்கள் அரச அலுவலகங்கள் எவையும் இயங்குவதில்லை.

ஆக, அரச தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்ட உடனேயே மகிந்த ராஜபக்ச தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார் என்பதும் அதன் மூலம் உடனடிப் பயனைப் பெற்றுக்கொண்டவர் கோத்தபாயவே என்பதும் வெளிப்படையாகின்றது.

இது உட்பட, குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக கோத்தபாய வழங்கிய வேண்டுகைப் படிவத்தில் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்கிற குற்றச் சாட்டும் உண்டு. அதிகாரத்தில் இருக்கும்போது எதையும் செய்யலாம் என்ற ரீதியில் அவரும் அவரது சகோதரர்களும் ஆற்றியவைகள் இப்போது முன்செய்த பாவங்களாக விடியத் தொடங்கியிருக்கின்றன.

இந்தவிவகாரத்தில் கோத்தபாய தவறு செய்துள்ளமை வெளிப்படையாகவே தெரிகின்றது என்று அனைத்துத்தரப்பினருமே கூறுகின்றனர். அது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும்போது, கோத்தபாயவின் அரசதலைவர் கனவு கலைவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. இலங்கையில் நீதி அனைவருக்கும் சமமானதுவா என்கிற கேள்வி அல்லது சந்தேகம் இதற்கு முன்னரும் பல தடவைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இப்போதும் அந்தக் கேள்வி தொக்கி நிற்கின்றது. 2018 ஒக்ரோபர் சதியின்போது மக்களாட்சியை நிலைநிறுத்துவதில் நீதித்துறை ஆற்றிய பணியை, வெளிப்படுத்திய துணிவை இந்த விடயத்திலும் நீதித்துறை மற்றொருமுறை வெளிப்படுத்தும் என்று மக்கள் ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றார்கள்.

# வாக்குறுதிகளால் ஏமாற்றப்படும் தமிழர்கள்

■ இந்துமதி

தமிழ் மக்களுக்கு எதையுமே வழங்காமல், செய்யாமல், ஏமாற்றிவரும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் வாக்குப் பிச்சை கேட்டு வருவதற்கு எந்தத் தகுதியுமே இல்லாதவர்கள். காலத்துக்குக் காலம் தேர்தல் வேளைகளில் மட்டுமே இவர்களுக்குத் தமிழர்களின் நினைப்பு மனதில் எழுகின்றது. அதுமட்டுமல்லாது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கும் தமது அடிவருடிகள் மூலமாக முயற்சி செய்வதையும்காண முடிகின்றது.

கோத்தபாய ராஜபக்சவுக்கான தேர்தல் பணிமனையொன்று கிளிநொச்சியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அங்கு வைத்து விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டு ஏற்பாட்டாளர்கள் மக்களைத் திரட்டிச் சென்றனர். இந்த அறிவிப்பை ஏற்று அங்கு சென்றவர்களுக்குப் பெருத்த ஏமாற்றமே கிடைத்தது. அங்கு வைத்து உதவுத் தொகை எதுவும் வழங்கப்படாததால் அங்கு சென்றவர்கள் தாம் ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டதாகத் தற்போது கூறுகின்றனர்.





இத்தகைய சம்பவங்கள் தொடரவே செய்யும். இனிமேல் மக்கள் ஏமாற்றுக்காரர்களிடம் ஏமாந்து விடாமல் அவதானமாக இருத்தல் வேண்டும். அதுமட்டுமல்லாது தேர்தல் கால வாக்குறுதிகளைப் புறம் தள்ளி விடுவதே சிறந்ததாகும்.

கிளிநொச்சியில் வைத்து மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்தானந்த அளுத்கமகே கூறிய கருத்து வேடிக்கையானது. கோத்தபாயவுக்கு அமோக வெற்றியைப் பெற்றுத் தருவதற்கு சிங்கள மக்கள் தயாராகிவிட்டார்கள். இந்த வெற்றியில் தமிழர்களும் பங்குகொள்ள வேண்டும் என்ற சாரப்பட அவர் கருத்து வெளியிட்டுள்ளார். அது மட்டுமல்ல கோத்தபாயவின் வெற்றிக்கு மகிந்தவின் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் கிடைக்கும் வாக்குகளே போதுமானவை. கூட்டமைப்பின் உதவி தமக்குத் தேவையில்லை என்பதை அவர் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அரசியலில் காலத்துக்குக் காலம் மாற்றம் ஏற்படுமென்பதை அவர் மறந்துவிட்டார். அதுமட்டுமல்லாது தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அவர்கள் தேர்தல் பரப்புரையில் ஈடுபடவேண்டிய தேவையும் இல்லை என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

கடந்த 2015ஆம் ஆண்டு நாட்டின் பிரச்சினைகள் யாவற்றுக்கும் தீர்வைக் காணக் கூடியதொரு அருமையான வாய்ப்புக் கிட்டியது. மாறிஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்று சேர்ந்து கூட்டரசு ஒன்றை அமைத்துக்கொண்டன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் அரச தலைவராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தலைமை அமைச்சராகவும் பதவிப் பொறுப்புக்களில் அமர்ந்துகொண்டனர்.

இதற்கு முன்னர் இந்த இரண்டு கட்சிகளும் ஒன்று செய்வதை மற்றையது எதிர்த்து வருவதே வழக்கமாக இருந்துவந்தது. இதனால் நாட்டில் நிலவிய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியவில்லை. ஆனால் 2015இல் இதற்கு முடிவு கட்டும் விதத்தில் இரண்டு கட்சிகளும் இணைந்த கூட்டரசு ஒன்று அமைந்தபோதிலும் இனப்பிரச்சினை உள்ளிட்ட எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காண முடியவில்லை.

இதை இந்த நாட்டின் சாபக்கேடு என்றுதான் கூற வேண்டும். இவ்வாறானதொரு வாய்ப்பு எதிர்காலத்தில் கிடைக்குமா? என்பது சந்தேகமாகவே உள்ளது.


இந்த நிலையில் அரச தலைவர் தேர்தலும் நெருங்கிவருகின்றது. மகிந்த தரப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏட்டிக்குப் போட்டியாகக் களமிறங்கியுள்ளன.

மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி மதில் மேல் பூனை போன்ற நிலையில் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

கோத்தபாய, சஜித் இருவருமே சிங்கள மக்களையும் பௌத்த பிக்குகளையும் ஒருபோதுமே பகைத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும். ஏனென்றால் இவர்களது அரசியலை சிங்கள மக்களும் பௌத்த பிக்குகளும்தான் தீர்மானிக்கின்ற சக்திகளாக விளங்குகின்றனர்.

எந்தவொரு தென்னிலங்கை அரசியல்வாதிகளின் உறுதிமொழிகளைத் தமிழர்கள் இனியும் நம்பிக்கொண்டிருப்பதால் பயனொன்றும் ஏற்பட்டு விடாது. அந்த வாக்குறுதிகள் வெறும் வாக்குறுதிகளாகவே இருந்து விட்டுப் போகட்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராசியில்லாத ராஜாக்களா சஜித் - கோத்தா?

■ தில்லாலங்கடி

அரச தலைவர் தேர்தல்கள் நாளுக்கு நாள் சூடு பிடித்துச் செல்கின்றன. இதயம் பலவீனமானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், 16 வயதுக் குறைந்தோர் பார்க்கத் தடை என்று சொல்லிவிட்டு காண்பிக்கப்படும் காட்சிபோல இலங்கையின் அரச தலைவர் தேர்தல்கள் சுவாரஸ்யமாக நகர்கின்றன.

இரு பிரதான வேட்பாளர்களும், தங்க ளது கட்சி சார்பில் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கே பெரும் போராட்டங்களை நடத்தவேண்டியிருந்தது. கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராக அறிவிப்பதற்கு மகிந்த ராஜபக்ச காட்டிய தயக்கம் வெள்ளிடைமலையானது. தனது தரப்பு விசுவாசிகள் ஊடாக கோத்தபாயவை எதிர்த்து முதல் பல கைங்கரியங்களை மகிந்தர் நிறைவேற்றியிருந்தார். எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி, கோத்தாவுக்கு தலையிடியைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்கக் குடியுரிமை துறப்பைக்கூட வெகு லாவகமாக தூக்கி எறிந்து தடை தாண்டி, மகிந்தருக்கு நெருக்கடியைக் கொடுத்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் அரச தலைவர் வேட்பாளராக வந்தார் கோத்தபாய.

மறுபுறம் சஜித் பிரேமதாசவுக்கும் இதே போன்று நெருப்புக் கண்டங்கள் பலவற்றைக் கடக்கவேண்டிய நிர்ப்பந்தம். தலைமை அமைச்சரும், 25 ஆண்டுகளாக கட்சித் தலைமைப் பொறுப்பை கட்டிப் பிடித்திருப்பவருமான ரணில் விக்கிரமசிங்கவைத் தாண்டி அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட வேண்டிய நெருக்குதல் சஜித்துக்கு. கோத்தாவுக்கு சவால் விடக்கூடிய ஒருவர் என்கின்ற பிம்பத்தை உருவாக்கிக் கொண்டு அதற்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியில் ஓரணியையும் தன்பின்னால் வளைத்துக் கொண்டு சஜித் காட்டிய வித்தைகள் ஏராளம். மாவட்டம்தோறும் வரவேற்பு நிகழ்வு என்ற பெயரில் கூட்டங்களை நடத்தி கட்சித் தலைமைக்கு எல்லாப் பக்கத்தாலும் அழுத்தங்களைப் பிரயோகித்து, நீண்ட நெடிய போராட்டத்தின் பின்னர் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார் சஜித்.

கட்சிக்குள்ளான கண்டங்களை இரண்டு வேட்பாளர்களும் தாண்டினாலும், அவர்களுக்கு வெளியிலும் இன்னமும் பல தடைக் கோடுகள் காத்துக்கிடக்கின்றன. கோத்தபாய ராஜபக்சவைப் பொறுத்த வரையில் அவரது குடியுரிமை விவகாரம் அவரது காலைச் சுற்றிய பாம்புதான். அண்ணனின் ஆட்சிக் காலத்தில் அதிகார முறைகேடுகள் ஊடாக எதனையும் செய்திருக்கலாம், பெற்றிருக்கலாம். ஆனால் அவை நீதியான விசாரணை களின் முன்பாக அவரை மாட்டிவிடும். கோத்தபாயவுக்கு தற்போது கெடு காலம். அது அவரைக் கொண்டு சென்று நீதிமன்ற விசாரணையில் விட்டிருக்கின்றது. பல தடைகளை தடயமே இல்லாமல் செய்த அவருக்கு, இந்த விவகாரம் மிகப் பெரிய ஆப்புத்தான்.

மறுபுறம் சஜித் பிரேமதாசவின் தெரிவை வல்லரசுகள் விரும்பவில்லை. அமெரிக்கா, இந்தியா இரண்டு நாடுகளும் இலங்கையின் அரசியல் விவகாரங்களில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துவன. கடந்த 2010ஆம் ஆண்டு தேர்தலாகட்டும், 2015ஆம் ஆண்டு தேர்தல் ஆகட்டும், இந்த இரண்டு தேர்தல்களிலும் இரண்டு நாடுகளினதும் வகிபாகங்கள் மிகப் பெரியன. அந்த நாடுகளின் ஆசீர்வாதங்களுடன்தான் சரத் பொன்சேகாவும், மைத்திரிபாலவும் களமிறங்கினார்கள். இது பரகசியம். ஆனால் தற்போது நிலமை அப்படியல்ல. இந்தியாவும், அமெரிக்காவும் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் கரு ஜயசூரிய களமிறங்குவதையே விரும்பின. அவரை ஒரு பொது வேட்பாளராக, மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவுடன் களமிறக்குவதற்கு அந்த நாடுகள் முயன்றன. இருப்பினும் அந்த முயற்சி அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை. கள நிலமையில் கருவுக்கான ஆதரவுத் தளம் என்பது பூஜ்யமாக இருந்தமையே, அந்த முயற்சியை வல்லரசுகள் கைவிடுவதற்கு காரணமாகின.



சஜித்தைவல்லரசுகள் விரும்பாவிடினும், கோத்தபாய வெல்வதை அந்த இரு நாடுகளும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. கோத்தபாயவை தோற்கடிக்க வேண்டும் என்பதில் வல்லரசுகள் வலுகுறியாக உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கிட்டத்தட்ட இதே நிலைப்பாட்டிலேயே உள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவையே கூட்டமைப்பின் தலைமை எதிர்பார்த்தது. சஜித்தை, ரணிலைப் போன்று நெருங்கி ஆதரிக்க கூட்டமைப்புத் தயாரில்லை. இதற்கு மேலாக, மறுபுறம் கோத்தபாய என்பதால் தன்னிடமே கூட்டமைப்பு வரவேண்டும் என்று சஜித் பிரேமதாச நினைக்கின்றார். அதனாலேயே கூட்டமைப்பிடம் பிடி கொடுக்காமல் நழுவுகின்றார். கூட்டமைப்பும் இதனை நன்குணர்ந்துள்ளது. சஜித்துக்கு பாடம் படிப்பிக்கவே, கோத்தாவுடன் பேச்சுக்களை நடத்தவும் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது. கோத்தாவை ஆதரிக்காவிடினும், கோத்தாவை ஆதரிப்பது போன்ற தோற்றத்தை இப்போதைக்கு ஏற்படுத்த கூட்டமைப்பு விரும்புகின்றது. இது சஜித் பிரேமதாசவுக்கு மற்றொரு கண்டமே. கட்சியிலிருந்து வேட்பாளராகத் தெரிவாகியாகி விட்டது. தமிழர் தரப்பின் பிரதான கட்சியான கூட்டமைப்பின் ஆதரவு இல்லை. வல்லரசுகளின் வழமையான ஆதரவு இல்லை. குறிப்பாக இந்தியா இப்போதும் சஜித்தை சந்தேகக்கண்ணோடு பார்க்கின்றது. ரணசிங்க பிரேமதாசவின் வழியில் ஆட்சியை முன்னெடுப்பேன் என்று மணிக்கொரு முறை சஜித் விடுகின்ற அறிக்கைகள் இந்தியாவுக்கு சீற்றத்தை உருவாக்கியிருக்கின்றன. இந்திய அமைதிப் படையை இலங்கை மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியவர் ரணசிங்க பிரேமதாச. இந்தியாவைப் பொறுத்த வரையில் இது ஆறாத காயம். இந்த நிலமையில் சஜித், திரும்பத் திரும்ப தந்தை வழியில் பயணிப்பேன் என்பது இந்தியாவுக்கு அவர் மீதான சந்தேகத்தை மேலும் மேலும் அதிகரிக்க வைக்கும். எனவே களமிறங்கிய இரண்டு பிரதான வேட்பாளர்களும் இந்தக் கண்டங்களைக் கடந்து மக்களின் மனங்களை வென்று, ஆட்சியைப் பிடிக்கும் வரையான காலம் மிகுந்த பரபரப்பாகவே இருக்கும். ■

## ஆசிரியருக்கான கடிதம்

# நேர்சிந்தனைகள் எப்போதும் அழகே!

'நாய்களே! குப்பைகளை இங்கே கொட்டுங்கள்' என்கின்ற அறிவித்தல் வீதி ஒன்றில் விளம்பரப் படுத்தப்பட்டிருந்ததை இந்தப் பகுதியில் எழுதியிருந்தேன். அண்மையில் அவ்வீதிவழியாக செல்லும் பாக்கியம் கிடைத்தது.

'நாங்கள் எங்கள் வீதியைச் சுத்தமாக வைத்திருக்கிறோம்' என்கின்ற அறிவித்தல் இப்போது அந்த வீதியில் பல இடங்களிலும் அழகுற காட்சியளித்தது. ஒப்பீட்டளவில் உண்மையில் அந்த வீதி சுத்தமாகத்தான் இருந்தது.

இதனை முன்மாதிரியாகக் கொண்டு எமது பிரதேசத்தை சுத்தமாக நாம் வைத்திருக்க வேண்டும். இதேபோன்ற பதாகைகள் வைக்கத்தக்கவாறு நாம் எமது வீதிகளைப் பேண வேண்டும். அதற்கு அந்தப் பகுதி பொது நிறுவனங்களும் குறிப்பாக பிரதேச சபைகளும் துணைநிற்க வேண்டும்.

'நாங்கள் எங்கள் வீதியை சுத்தமாக வைத்திருக்கின்றோம்' எனும்போது எமது நெஞ்சு நிமிர்ந்து நிற்கின்றது.

'சுத்தமாக வைத்திருப்போம்' எனும் வெற்றுக் கோஷத்தைவிட சுத்தமாக வைத்திருக்கிறோம் எனும் நிமிர்வு புதிய நம்பிக்கைகளைத் தருகின்றது. உண்மையில் இத்தகைய முன்னோடிச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துபவர்கள் சம்பியன்கள்தான்.

செ.செல்வராஜா, கொக்குவில்.

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலில் காயப்பட்டவர் இறந்த பின்பே பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 3

இனந்தெரியாத கும்பலின் தாக்குதலுக்கு இலக்கான வர்த்தகர் சிகிச்சை பயனளிக்காது 24 நாள்களின் பின்னர் உயிரிழந்த நிலையில், நேற்று முன்தினமே தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தியுள்ளனர்.

செப்ரெம்பர் 6ஆம் திகதி தாக்குதல் இடம்பெற்று இரும்பக உரிமையாளர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸார் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். கோண்டாவில் உப்புமடச் சந்தியில் அமைந்துள்ள லக்சுமி இரும்பக உரிமையாளர் கந்தையா கேதீஸ்வரன் (வயது -47) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 6ஆம் திகதி இரண்டு உந்துருளிகளில் வந்த கும்பல் இரும்பகத்துக்குள் புகுந்து அதன் உரிமையாளரைக் கண்மூடித்தனமாகத் தாக்கி பெரும் அடாவடியில் ஈடுபட்டுச் சென்றிருந்தது.

இரும்பகத்திலிருந்த கட்டை ஒன்றை எடுத்து உரிமையாளரின் தலையில் கும்பல் தாக்கியதால் வர்த்தகர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. 24 நாள்களின் பின்னர் அவர் திங்கட்கிழமை இரவு உயிரிழந்தார்.

"சம்பவ தினத்தன்று கோப்பாய் பொலிஸார் இரும்பகத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் உரிமையாளரைத் தாக்கிய கும்பல் பயன்படுத்திய மரக்கட்டையை சான்றுப்பொருளாக எடுத்துச்செல்ல பொலிஸார் மறுப்புத் தெரிவித்திருந்தனர்" என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

இரும்பக உரிமையாளர் உயிரிழந்த நிலையில் அவசர அவசரமாக விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார், யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் அறிக்கை தாக்கல் செய்தனர்.

போதனா மருத்துவமனைக்குச் சென்ற யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர்போல் இறப்பு விசாரணை நடத்தினார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிவான், வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார். தாக்குதல் நடந்த பின்னர் சில தினங்கள் இரும்பகம் திறந்து வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாண தடயவியல் பொலிஸார் நேற்றுமுன்தினம் சம்பவ இடத்தில் தாக்குதல் தொடர்பான தடயவியல் விசாரணைகளை முன்னெடுத்தனர். (கு-37)

## அராலிசரஸ்வதிவித்தியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 3

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சதாசிவ மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், உதயன் குழும நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராகவலிகாமம்வலயக்கல்விமுகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசியுரையை அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயக் குருக்கள் சிவசிறி.தி.சர்வேஸ்வரக்குருக்களும், நினைவுரையைஓய்வுபெற்றஅதிபர் மா.சோமசேகரமும் நிகழ்த்துவர். பிரிட்டன் இரத்தினம் அறக்கட்டளை, கனடா அராலி கலை கலாசார ஒன்றியம் என்பன புத்தக அன்பளிப்பு செய்யவுள்ளன. (க)



## அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

கொடிகாமம், ஒக். 3

யாழ்ப்பாணம் கச்சாய் மகா வித்தியாலய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் பாடசாலையில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. கலந்துரையாடலில் பாடசாலை அதிபர் கா.குணசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளரும் வட்டார உறுப்பினருமான செ.மயூரன் மற்றும் சமூக மட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

80 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வகுப்பறைக் கட்டடம் வலுவிழந்த நிலையில் இருக்கிறது. அதனை புதிதாக அமைப்பதற்கும், விளையாட்டு மைதானத்துக்கு சுற்றுமதில் அமைப்பதற்குமான நிதியுதவி தேவை என அதிபரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. வலுவிழந்த கட்டடத்தை சீரமைப்பதற்கு நிதியுதவி பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார். (ஐ-159)

## கேதார கௌரி விரதத்தில் சிறப்பு வழிபாடுகள்

வடமராட்சி, ஒக். 3

கேதாரகௌரி விரதத்தை முன்னிட்டு புலோலி பர்பதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன்) ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

கேதாரகௌரி விரதம் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் நடைபெற்று 27 ஆம் திகதி காப்புக்கட்டுதலுடன் நிறைவு பெறவுள்ளது.

விரத காலங்களில் அம்பாளுக்கு காலை 9 மணிக்கு அபிசேகம், சிறப்பு பூசை நடைபெற்று காலையும், மாலையும் விரதகாரர்கள் பூவும் தண்ணீரும் சாத்தும் வழிபாடு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## தென்மராட்சியில் அமைக்கப்பட்ட 19 குடியிருப்புக்கள் திறந்துவைப்பு

தென்மராட்சி, ஒக். 3



தென்மராட்சிப் பிரதேசத்தில் தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் மீள்குடியமர்வு மறுவாழ்வளிப்பு வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அமைத்த 19 வீடுகள் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.



அவை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அமைச்சின் செயலர் செந்தில்நந்தனன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி) முரளிதரன் கலந்து கொண்டார். நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி வி.கௌசிகன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பிரதேசத்தைச் சேர்ந்த சந்திரபுரம் கிராமத்தில் 10 குடியிருப்புகளும் மட்டுவில் கிழக்கில் 9 குடியிருப்புகளும் கையளிக்கப்பட்டன. (து-9)

## பவுசருக்குள் சிக்கியவர் பரிதாபமாக இறந்தார்

யாழ்ப்பாணம், ஒக். 3

குடிதண்ணீர் பவுசர் உழவு இயந்திரத்தில் சிக்குண்டவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மனோரஞ்சனா பாலச்சந்திரன் (வயது -54) என்பவரே உயிரிழந்தார்.

குடி தண்ணீர் பவுசர் அந்தப் பகுதிக்கு வந்தவுடன் தண்ணீரைப் பெறுவதற்கு அவர் சென்றுள்ளார். பவுசரை சாரதி பின்னோக்கி நகர்த்தும்போது அதில் சிக்கிக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். (கு-726)

# வீடுகள் அரைகுறையாக உள்ளன மழையால் மக்கள் பெரும் பாதிப்பு

சாவகச்சேரி, ஒக். 3

சாவகச்சேரி, கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அமைக்கப்பட்ட 73 குடும்பங்களுக்கு வீடமைக்க நிதி வழங்கி வேலைகள் தொடங்கிய நிலையில், மிகுதி நிதி விடுவிக்கப்படாததால் மழை பெய்யும் வேளைகளில் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் அந்தப் பகுதிக்குச் சென்ற அதிகாரசபையின் உயர் அதிகாரி கொடுப்பனவு வழங்குவதாகத் தெரிவித்துச் சென்றிருந்தார். ஒரு வாரமாகியும் கொடுப்பனவு கிடைக்கவில்லையென்று தெரிவித்தனர்.

பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்போது வீடமைப்புத் திட்டங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவிக்கின்றன. பிரதேச செயலகத்தின் பரிந்துரைக்கு அமையவே வீடமைப்புத் திட்டம் தமக்கு வழங்கப்பட்டது என்று பிரதேச செயலக அதிகாரிகள் கைவிரிக்கின்றனர். கொடுப்பனவு வழங்கத் தவறும் பட்சத்தில் குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தனர். (து-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கடற்றொழிலால் இறால் அருகும் துர்ப்பாக்கியம்

## நந்திக் கடலில் நீடிக்கும் இந்த நிலையை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

*முல்லைத்தீவு, ஒக். 3*

முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் பகுதியில் தற்போது சட்டவிரோத கடற்றொழில் இடம்பெற்றுவருகின்றது. இதனால் இறால் பெருக்கம் அழிக்கப்பட்டு எதிர்காலத்தில் அவற்றை நம்பியுள்ளவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே சட்டவிரோத தொழில் நடவடிக்கையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வட்டுவாகல் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள வறட்சியால் நந்திக்கடல் மற்றும் வட்டுவாகல் பாலத்தடிப்பகுதிகளில் தண்ணீர் வற்றியுள்ளது.

கடந்த காலங்களில் இறால்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வளர்ந்துவரும் தற்போதைய காலத்தில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை தொடர்கின்றது. தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதனால் இறால்குஞ்சுகள் அழிவுறும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இன்னும் மூன்று மாத காலத்தில் உள்ள இறால் பெருக்கம் இல்லாமல் போகும் நிலை ஏற்படும் என்றும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வட்டுவாகல் பாலம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தொழில் செய்யும் மீனவர்கள் இனி வரும் இறால் பெருக்கக் காலங்களை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். நந்திக்கடல் நீர் ஏரியில் தற்போதும் தெற்கு, மேற்குப் பக்கமாக சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த சட்ட விரோத மீன்பிடியாளர்கள் இதைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சங்கத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர். (த-ரி3)

# பச்சைப் புல்மோட்டைக்குள சீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டது

முல்லைத்தீவு, ஒக். 3

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள பச்சைபுல்மோட்டைகுளம் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவில் நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாத குளமாக இது காணப்பட்டது. இதனால் இந்தக் குளத்தை நம்பியுள்ள விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டிருந்தனர்.

இந்தநிலையில் புல்மோட்டைக் குள சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கமநலசேவைகள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் நான்கு மில்லியன் ரூபா செலவில் இந்தக் குளம் சீரமைக்கப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி3)

# கோப்பாய் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 3

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கோப்பாய் பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவை மற்றும் பிரதேச கலாசார அதிகார சபை ஆகியவை இணைந்து நிகழ்வை நடத்தவுள்ளன.

பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக கணக்காளர் திருமதி கவிதாம்பிகை பிரதீபன், மதிப்புறு விருந்தினர்களாக கலாபூசணம் நடராசா சிவசுப்பிரமணியம், இளம் எழுத்தாளர் அமுதவிழி மகேந்திரராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் செம்புலம் மலர் வெளியீடு இடம்பெறும். நூலின் வெளியீட்டுரையை வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவையின் நிர்வாக உறுப்பினர் இ.ஜெயக்குமார் நிகழ்த்துவார்.

மலரின் முதற்பிரதியை கலாபூசணம் ந.சிவசுப்பிரமணியம் பெற்றுக்கொள்வார். மலரின் மதிப்பீட்டுரையை தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் சி.நந்தகுமாரன் நிகழ்த்தவுள்ளார்.

பிரதேச கலைஞர்களுக்கான செம்புலக்குரிசில் விருதுகளும், பிரதேச மட்டக் கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும் நிகழ்வில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9,11)

# வருடாந்த பொதுச்சபை கூட்டம்

வவுனியா, ஒக். 3

வவுனியா மாவட்ட சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு சமாச அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

பொதுச்சபைக் கூட்டத்தில் சமாசத்தின் இறுதியாக நடைபெற்ற கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தல், 2020 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பித்தல், 2018 ஆம் ஆண்டு திறமையாக இயங்கிய கடனைத் தவணை தப்பாமல் ஒழுங்காக மீள செலுத்திய சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பரிசில்கள் வழங்கல், சமாசத்தின் புதிய இயக்குனர் சபைத் தெரிவு என்பன இடம்பெறும்.

சமாசத்தின் தலைவர் அ.ச. பாரதிஆனந்தம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இந்திரா சுபசிங்க, சமாசத்தின் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் அ. பிரணவன், பொதுச் சபை பிரதிநிதிகளான சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர். (க)

# தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு முல்லையில் சிகிச்சை நிலையம்

முல்லைத்தீவு, ஒக். 3



முல்லைத்தீவு மாவட்டத்தில், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கவென்று ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் அமைக்கப்பட்ட கட்டடம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கத்தின் கோரிக்கைக்கமைய, கனடாவிலுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்பான 'கனேடியத் தமிழர் தேசியப் பேரவை' கட்டடம் அமைக்க நிதி வழங்கியுள்ளன.

கடந்த மூன்று மாதங்களாக நடமாடும் சிகிச்சைக்கான நிதியில் தடங்கல் ஏற்பட்டிருந்த நிலையில் அதற்குரிய கட்டடம் திறந்துவைக்கப்பட் டுள்ளது.

சிங்கப்பூர் நாட்டில் வசிக்கும் மருத்துவரும் பேராசிரியருமான குபேரன் ஒரு வருடத்துக்கு இந்தச் சிகிச்சைகளுக்குரிய நிதியை வழங்க முன்வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் சிகிச்சை மூலம், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 180க்கும் மேற்பட்ட முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு வருடத்துக்குப் பயன்பெற முடியும். நிகழ்வில், மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட பயனாளிகளும் கலந்துகொண்டிருந்தனர். (த-246,7,222)

# விவசாயக் காணி உறுதிப் பத்திரம் கிடைக்காதோர் முறையிடவும்

## *மாகாண காணி ஆணையாளர் அறிவுறுத்து*

முல்லைத்தீவு, ஒக். 3

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பல விவசாயிகளுக்குக் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு வழங்கப்படாதவர்கள் முறைப்பாட்டுக் கடிதம் அனுப்புமாறு காணி ஆணையாளர் அறிவுறுத்துகின்றார்.

அவர்களின் காணி உறுதிப்பத்திரங்கள் கடந்தகால போரில் தவறிவிட்டன.

2011 ஆம் ஆண்டு மீள்குடியமர்வின்போது குறித்த விவசாயக் காணிகளின் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இதுவரை அதற்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

காணிப் பிணக்குகள் காணப்பட்டாலும் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் [illegible] கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் [illegible] எனினும் இதுவரை காணிக்கான உறுதிப் பத்திரங்கள் எவையும் வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பெரிய இத்திமடு கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள அலைஇந்தியாகுளம், மானம்புல்குளம், கோடாலிக் கல்லுகுளம், குஞ்சுக்கோடலிக் கல்லுக்குளம், கங்கானியாகுளம், வேப்பங்குளம், அமுதங்குளம், அலகரகுளம், சமளங்குளம், சேககண்டிகுளம், குஞ்சுக்குளம் எனப் பல குளங்களின் கீழ் உள்ள ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் இவ்வாறு உரிமப் பத்திரங்கள் இல்லாது காணப்படுகின்றன.

இது தொடர்பில் மாகாணக் காணி ஆணையாளரிடம் கேட்டபோது காணிக் கச்சேரி நடைபெற்றால் கண்டிப்பாகக் காணிப் பத்திரம் கிடைத்திருக்கும்.

இதுவரைக்கும் அவ்வாறு கிடைக்காவிட்டால் காணி ஆணையாளர், இல59, கோவில் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு முறைப்பாட்டுக் கடிதம் அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்துகின்றேன்- என்று தெரிவித்தார். (த-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டம் விடும் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக். 3
பன்னாட்டு உளவள தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் பட்டம் விடும் போட்டி நடைபெறவுள்ளது.
"தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பதை தவிர்ப்பதில் கவனம் செலுத்துவோம்" என்ற தொனிப் பொருளில் முல்லைத் தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்குஇடையே நடத்தப்படும் இப் போட்டியானது எதிர்வரும் ஞயிற்றுக்கிழமைமுல்லைத் தீவு நகரக் கடற் கரையில் பிற்பகல்3மணிதொடக்கம் 4 மணி வரை நடைபெறவுள்ளது. (ஜ-7)

## துப்புரவு பணிகள்

வவுனியா, ஒக்.3
டெங்கு நுழம்பு பெருக்கத்தைத் தடுக்கவும், பார்த்தீனியத்தை ஒழிக்கும் நோக்கோடும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். வவுனியா குட்செட் வீதியில் நேற்று இது ஆரம்பிக்கப்பட்டது.
பிரதேச சபைத் தவிசாளர் நடராஜசிங்கம் தலைமையில் நடந்த நிகழ்வில், பிரதேச சபை ஊழியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். சுகாதாரப் பரிசோதகர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று சோதனைகளை மேற்கொண்டனர். (து-110)



# வறட்சியைப் போக்க மக்கள் செய்த காரியம்

### குவியும் பாராட்டுக்கள்

வவுனியா,ஒக்.3
வவுனியாவில் நிலவும் வறட்சியான காலநிலையைச் சமாளிப்பதற்கு செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியகட்டு கணேசபுரம் கிராமத்தில் அமைந்துள்ள குறிசுட்ட குளம் பொதுமக்களின் உதவியுடன் நேற்றுமுன்தினம் மறுசீரமைக்கப்பட்டது.

கிராம அலுவலர் இராதகிருஸ்ணனின் வழிகாட்டலின்கீழ்கிராம அமைப்புக்கள், பெண்கள் அமைப்பினர் இணைந்து குளத்தைச்சீரமைத்தனர்.
கிராம மக்களின் முயற்சியால் குறிசுட்ட குளம் நீரைத் தேக்கி வைக்குமளவில் தற்போது மறு சீரமைக்கப்பட்டுள்ளது.
பல வருடங்களாக அரச அதிகாரிகளின் அசமந்தபோக்கால் குளம் சீர மைக்கப்படாத காரணத்தால், பாவனைக்குதவாமல் காணப்பட்டது.
மக்கள் தாமாக முன்வைத்து குளத்தை மறுசீரமைத்த விடயத்தைப் பலரும் பாராட்டியுள்ளனர். (க-ரி4)

## பலமான மூடிகளை அமைத்து பாதுகாப்பை உறுதி செய்யவும்

### பெற்றோர், மாணவர்கள் கோரிக்கை

கொழும்புத்துறை, ஒக்.3
யாழ்ப்பாணம், சுண்டிக்குழி மகளிர் கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட்டுவரும் வீதி, வடிகாலின் மேல்மூடிக் கற்கள் பலமற்றதாகவுள்ளன. அவற்றில் பல உடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் மாணவர்களும் பொதுமக்களும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று கவலை தெரிவிக்கின்றனர்.
வடிகாலின் மேல்மூடிக் கற்கள் போதிய கம்பிகள் இன்றியும் தகுந்த சீமெந்துக் கலவையின்றியும் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தும்போதே உடைந்து விடுகின்றன. பாடசாலை நேரங்களில் இந்தப் பகுதியில் அதிகளவான வாகனங்கள் வந்து செல்லும்போது மூடிகள் உடைந்து விழும் நிலை காணப்படுகின்றது.
ஒப்பந்தகாரரின் பொறுப்பற்ற செயற்பாட்டால் மாணவர்களும் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்கும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று மக்கள் தெரிவித்தனர்.
அதேவேளை வடிகாலின் உள்ளே தூர்ந்துபோயுள்ள மண் அகற்றப்படாது காணப்படுவதால் வெள்ளம் ஓட முடியாது தேங்கும் நிலையும் ஏற்படலாமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.
உறுதியான கற்களைக் கொண்டு வடிகாலை மூடி, மாணவர், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உரியவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (து-135)


### கஞ்சா வைத்திருந்தார்கள் என

# மணற்காட்டில் இருவர் கைது



யாழ்ப்பாணம், ஒக். 3
கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்களிடம் 6 கிலோக்கிராம் கஞ்சா நேற்றுமுன்தினம் மதியம் மீட்கப்பட்டது என்றும் தெரிவித்தனர்.
பருத்தித் துறை மணல்க்காடு பகுதியில் டபிள்யு.ஜெ.பி சேனாதீர தலைமையிலான காங்கேசன்துறை சிறப்புக் குற்றத் தடுப்புப் பொலிஸார் நடத்திய சோதனையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேக நபர்கள் சட்ட நடவடிக்கைக்காகப் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-726, ரி1)

# திட்டமிடப்படாத பாலத்திருத்தம் போக்குவரத்துக்கு மக்கள் சிரமம்



மன்னார், ஒக்.3
திட்டமிடப்படாது பொருத்தமற்ற காலத்தில் முதன்மைப் பாலத்தின் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால்போக்குவரத்துக்கு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மன்னார் மடுக்கரை கிராமத்துக்குச் செல்லும் முதன்மை வீதியில் பாலத்தின் திருத்த வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் அந்தக் கிராமத்துக்குச் செல்லும் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் பொது மக்கள் பயணங்களுக்குப் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.
தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால், போடப்பட்டிருக்கும் மாற்றுப்பாதை குளத்துக்கு உள்ளாக இருப்பதால் மக்கள் பயணிக்க முடியாதுள்ளது.
மடுக்கரைக் கிராமத்தில் சுமார் 700 குடும்பங்களுக்கும் அதிகமானவர்கள் வசித்துவரும் நிலையில், முதன்மைப் பாதை இன்றி அன்றாடத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளனர்.
பொருத்தமில்லாத மழை காலத்தில் இவ்வாறான வேலை ஆரம்பிக்கப்பட்டதால், 5 கிலோ மீற்ற ருக்கு மேல் மாணவர்கள் நடந்தே பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதே நிலமை ஏனையவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.
மடுக்கரைக் கிராமத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இந்த வீதி வழியாகவே அனைத்து மக்களும் ஆபத்துகளின்றி காப்பாற்றப்பட்டனர்.
இது தெரிந்தும் அரச அதிகாரிகள் ஒப்பந்தகாரர்களை வேலையை ஆரம்பிக்க சம்மதித்தது ஏன்என்றுமக்கள்கேள்வி எழுப்பியுள்ளனர். விரைவில் வீதிப்பணியை நிறைவு செய்து மடுக்கரை மக்களைப் பாதிப்பில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக மன்னார் மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியலாளர் றிஜாட் யூலிட்டிடம் கேட்ட போது,
மடுக்கரைவீதியின்முதன்மைப் பாலம் கட்டாயமாகப் புதுப்பிக்கப்பட வேண்டியது. இது தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டது. பாலவேலைதாமதித்தால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் சென்றுவிடும். அதனால் அவசரமாக வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
குறைந்தது பத்து நாள்களுக்குள் பாலத்தின் வேலை பூர்த்தி செய்யப்படும்- என்றார். (க-213)

# தரமான விதைகள் உற்பத்திக்கென வவுனியாவில் அமைப்பு ஆரம்பம்

வவுனியா,ஒக். 3
வவுனியா மாவட்டத்தில் விதைகளுக்கானதேவைப்பாடு மற்றும் தரமான விதைகளின் உற்பத்தி என்பவற்றைக் கருத்திற் கொண்டு வவுனியா மாவட்ட விதைகள் உற்பத்தியாளர்கள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வு மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுமுற்பகல் 10 மணிக்கு பிரதிப்பணிப்பாளர்.ரி. யோகேஸ்வரனின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.
வவுனியா மாவட்ட விதைகள் உற்பத்தியாளர்கள் அமைப்பின் தலைவராக. சி.பத்மநாதன் (ஓய்வுபெற்ற விவசாய ஆசிரிய ஆலோசகர்), செயலராக ரி.சத்திய மூர்த்தி (ஓய்வுபெற்ற விவசாயப் பிரதிப் பணிப்பாளர்), பொருளாளராக த.பரதலிங் கம்,(ஓய்வுநிலை பண்ணை முகாமையாளர்), உபதலைவராகவே.தனபாலசிங்கம், உபசெயலராக த.துஸ்யந் தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
நிர்வாகக் குழு உறுப்பினர்களாக த. தவலிங்கம், சே. சேதுகாவலர், எம்.சமரசிங்க, செ.மனோகரன் போசகராக விவசாய பிரதிப்பணிப்பாளர் ரி. யோகேஸ்வரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (து-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர்,சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.3
இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு முதியோர்,சிறுவர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்றது. சங்கத் தலைவர் பாக்கியராசா பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பதிகாரி இரட்ணசிங்கம் அமலன் கலந்துகொண்டார்.
சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர் எம்.ஆர்.ஜெயதரன்,சமுர்த்தி அலுவலர் என்.உமாகாந்தன்,பொருளாதார அபிவிருத்தி அலுவலர் வி.மாதவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் கிராம நன்மைக்காக உழைத்த முதியோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன் சிறுவர்களுக்கான பரிசுப் பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ)















# சிறுவர்களுக்கு காது கேட்கும் கருவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.3
நீர்கொழும்பு லயன்ஸ் கழகத்தினர் காங்கேசன்துறை லயன்ஸ் கழகத்துக்கு வழங்கிய காது கேட்கும் கருவிகள் கிளிநொச்சி சக்தி கருணை இல்லச் சிறுவர்களுக்குக் கையளிக்கப்பட்டன.
பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்ட இல்லத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் சிறப்புத் தேவையுடைய சிறுவர்களுக்கு காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டன.
அத்துடன் இல்லச் சிறுவர்களின் நலன் கருதி வெண் எழுத்து பலகையும் வழங்கப்பட்டது என்று கழகத் தலைவரும் பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் தலைவருமான லயன் கா.பீ.ஜெயவிந்தன் தெரிவித்தார். (க-9)





# சிறுவர் தின நிகழ்வும் திறன்வகுப்பறை திறப்பும்

சாவகச்சேரி,ஒக்.3
பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வும் இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கான திறன் வகுப்பறை திறப்பும் நேற்று முன்தினம் இடம்பெற்றன. அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர்களான தர்மலிங்கம் தம்பதிகள். சிறப்பு விருந்தினராக உலக சேவை பிராந்திய இணைப்பாளர் கா. சற்குணதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கல்லூரியில் ஓய்வுபெற்ற அதிபர் க. அருந்தவபாலன் தென்மராட்சி பிரதேச கலாசார அலுவலர் திருமதி அ.அன்பரசி ஆகியோரும், கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஐ-9)



# புவேந்தன் நிலையத்தில் சிறுவர் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி,ஒக்.3
சாவகச்சேரி கண்டுவில் புவேந்தன் நிலையத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நிலைய மண்டபத்தில் நேற்று நடைபெற்றன. நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச சிறுவர் மேம்பாட்டு அலுவலர் சுரேஷ்குமார், பிரதேச ஆரம்பப்பிள்ளைப்பருவ அலுவலர் அ.வினோதன் சாவகச்சேரி முன்பள்ளிக் குடும்ப இணைப்பாளர் [illegible] ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வில் சிறார்களின் பேச்சு, கவிதை போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-9)

★★★★★

அளவெட்டி, ஒக்.3
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி. வடக்குப் பிரதேச சபை மல்லாகம் உப அலுவலகம், அளவெட்டி பொதுநூலகம் ஆகிய இணைந்து பன்னாட்டு சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.
இன்று வியாழக்கிழமை அளவெட்டி பொதுநூலகத்தில் காலை 9 மணிக்கு மல்லாகம் உபஅலுவலக பொறுப்பதிகாரி தியாகராசா தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபை செயலர்·இராமலிங்கம் பகீரதன், வலி.வடக்கு பிரதேச சபை முதன்மை முகாமைத்துவ உதவியாளர் ஸ்ரீஉதயமோகன் யோகராணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடிகாமம்,ஒக். 3

"பிள்ளைகளை வெற்றி கொள்வதற்கான வளமான நாடு" எனும் தொனிப் பொருளில் சிறுவர் தின நிகழ்வு போக்கட்டி அ.த.க. பாடசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கெற்பேலி அ.த.க. பாடசாலை அதிபர் க.ஞானராஜ் கலந்து கொண்டு சிறுவர் தினம் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்

மாணவர்களின் கலை நிகழ்வுகளும், மைதான நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-159)



## சிறுவர் தினத்தில் மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கிவைப்பு

வவுனியா வடக்கு, கல்வி வலயத்துக்குட்பட்ட ஓமந்தை மத்திய கல்லூரி, மாணிக்க இலுப்பைக்குளம் ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு பன்னாட்டு சிறுவர் தினமான நேற்று முன்தினம் கற்றல் உபகரணங்கள் பாடசாலைக்கு மின்விசிறி கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. ஓமந்தை பொலிஸாரின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் இரண்டு பாடசாலைகளிலும் அவற்றின் அதிபர்கள் தலைமையில் நடைபெற்றன.

இதைவிட, ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி சுரேஸ்த சில்வா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஓமந்தையிலுள்ள சிறப்புத் தேவைக்குட்பட்ட வசதியற்ற பாடசாலை செல்லும் 15 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸலால் தசில்வா, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.எம். மல்வலகே, வவுனியா வடக்கு கல்விவலய பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (த)



கொடிகாமம்,ஒக் .3

சிறுவர்,முதியோர் தின நிகழ்வு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

கல்லூரி ஆசிரியர் கழகத்தின் ஏற்பாட்டில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-159)

## சபாரத்தினத்தின் சிரார்த்த தினம்

யாழ்ப்பாணம், ஒக். 3

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் சுப்பையா சபாரத்தினத்தின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வுகள் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றன.

சபாரத்தினத்தின் மகன் கேதீஸ்வரனின் நிதி உதவியில் புங்குடுதீவிலுள்ள அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சோ.சேனாதிராசா முதன்மை விருந்தினராகக்கலந்துசிறப்பித்தார். தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டப் பொருளாளருமான கனகசபாபதி, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பரஞ்சோதி, தமிழ் அரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு பிரதேச கிளையினரும், தமிழ் அரசுக் கட்சியின் தீவக இளைஞர் முன்னணியினர், மகளிர் முன்னணியினர் பொது மக்கள், முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-154)





கொடிகாமம்,ஒக். 3

பன்னாட்டு சிறுவர் தின நிகழ்வு யாழ்ப்பாணம் கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலையில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக வரணி ஆசிரிய மத்திய நிலையம் ஆசிரிய கல்வியியலாளர் நீ.தவராசா, தென்மராட்சி பிரதேச செயலக தேசிய உற்பத்தி திறன் அலுவலர்களான திருமதி கலைச்செல்வி இராசதீபன், திருமதி கே.மயூரிகா, சிறுவர் மேம்பாட்டு அலுவலர் கே.சசிரேகா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சிறுவர் உரிமைகள் தொடர்பாக விருந்தினர்களால் உரை நிகழ்த்தப்பட்டது.

அத்துடன் மாணவர்களுக்கு மாலை அணிவித்து, பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ஐ-159)



சாவகச்சேரி,ஒக். 3

பன்னாட்டு சிறுவர்,முதியோர் தின நிகழ்வு தென்மராட்சி மீசாலை கமலாம்பாள் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் அதிபர் திருமதி வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் வே.இராசரத்தினம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார். (ஐ-9)



வாணி விழாவை முன்னிட்டு கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் முன்மை மண்டபத்தில் தோரணம் கட்டுதல், கோலம் போடுதல், மாலை கட்டுதல் போட்டிகள் மாணவர்கள் இடையே நேற்று முன்தினம் நடத்தப்பட்டன. (த-159)

காரைநகர், ஒக் .3

பன்னாட்டு சிறுவர், முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு காரைநகர் பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச்செயலக முதன்மைக்கணக்காளர் ஜே.கில்பேட்குணம், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண தலைமைப் பீட சமூக சேவை அலுவலர் என்.இராஜமனோகரன், மாவட்டச் செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் என் மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் முதியோர் மதிப்பளிப்பு, சிறுவர், முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோருக்கான போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் சிறுவர், முதியோர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-250)







கொடிகாமம்,ஒக். 3

பன்னாட்டு சிறுவர் தின நிகழ்வு யாழ்ப்பாணம் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் எ.றஜிதகுமார் கலந்துகொண்டு ஆடல் பாடல்கள் மூலம் மாணவர்களை மகிழ்வித்தார்.

அத்துடன் ஆசிரியர் செல்வி ந.சிவரூபி சிறுவர் தினம் தொடர்பாக சிறப்புரை ஆற்றினார். (ஐ-159)





பன்னாட்டு சிறுவர் தின நிகழ்வு பளை, தர்மக்கேணி அ.த.க.பாடசாலையில் நேற்றுமுன்தினம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்புக்குத் தாமதிக்கப்பட்ட நிதியை விடுவித்தது திறைசேரி

## யாழ். மாவட்டத்துக்கு 25 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக். 3

வீடமைப்புக்குத் தாமதிக்கப்பட்ட நிதியில் ஒரு கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 25 மில்லியன் ரூபா நிதி தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. அந்த நிதி பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் இந்த வருடம் தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைப்பதற்கு பயனாளிகள் பிரதேச செயலகங்கள் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பயனாளிகளால் வீடுகள் அமைப்பதற்கான ஆரம்பக் கட்ட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

வேலைகளை ஆரம்பித்தவர்களுக்கு முதல் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அடுத்த கட்ட வேலைகளுக்குரிய கொடுப்பனவு நிதி திறைசேரியில் இருந்து கிடைக்காமையால் பயனாளிகளுக்கு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது 25 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது. அந்த நிதி 50 ஆயிரம் ரூபா வீதம் 500 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்ட நடவடிக்கைகளுக்கு அடுத்த கட்டமாக நாடுமுழுவதும் 267 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப் பட்டுள்ளது. அதில் வடக்கு மாகாணத்துக்கு 100 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

### சிறுவர், முதியோர் தின நிகழ்வு

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பன்னாட்டு சிறுவர் மற்றும் முதியோர் தின விழா இன்றுதென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறுவர்கழகசிறுவர்களுக்கிடையில்நடத்தியபோட்டிகளில் வெற்றி யீட்டியவர்களுக்குப் பரிசில்கள்வழங்கப்படவுள்ளன. அத்துடன் முதியோர்கள்மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

### வைரவிழாவும் நூல் வெளியீடும்

முல்லைத்தீவு, ஒக். 3

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வைரவிழாவும், நூல் வெளியீடும் இன்று வியாழக்கிழமை வித்தியாலய மண்டபத்தில்முற்பகல்10மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர்அ.அன்ரன்டயஸ் தலைமையில்நடைபெறவுள்ளநிகழ்வில்முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி.மாலதிமுகுந்தன், துணுக்காய் பிரதேச செயலர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-222)

### வருடாந்த திருவிழா

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 5.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும். திருவிழாத் திருப்பலி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற்று தொடர்ந்து அன்னையின் தேர்ப்பவனியும், திருச்சொரூப ஆசிரும் இடம்பெறும் என்று பங்குத் தந்தை அருட்பணி றோய்பேடினன் அடிகள் அறிவித்துள்ளார். (க-135)



## காந்தி சிலை முன்பாக அவரின் பிறந்ததினம்

யாழ்ப்பாணம், ஒக். 3

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தினம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரக ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகர மத்தியில் அமைந்துள்ள காந்தி நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டிருந்த பலரும் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். காந்தி பாடலும் இசைக்கப்பட்டது.

நிகழ்வில் மாநகர முதல்வர் இ.ஆர்னல்ட், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர், தூதரக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த-ரி1)

## நானாட்டான் ஆத்திக்குழி வீதி ரூ.10 மில்லியனில் சீரமைப்பு

மன்னார், ஒக். 3

நீண்ட காலமாகப் பாதிப்படைந்த நிலையில் காணப்பட்ட நானாட்டான் ஆத்திக்குழி குளக்கட்டு முதன்மை வீதி கொங்கிறீட் வீதியாக அமைக்கும் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் சீரமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் நகர சபையின் தலைவர் ஞா. அன்ரனி டேவிட்சன் மற்றும் நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் தி.பரஞ்சோதி ஆகியோர் இணைந்து சீரமைப்பை ஆரம்பித்து வைத்தனர். 550 மீற்றர் நீளம் கொண்ட ஆத்திக்குழி வீதி 10 மில்லியன் ரூபாவில் சீரமைக்கப்படுகின்றது.

நானாட்டான் பிரதேச சபை உப தலைவர் எஸ்.லூர்துநாயகம், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள், ரெலோ இயக்க இளைஞர் அணி செயலர் ஜீ.பிறேம், நாடாளுமன்ற உறுப்பினரின் மாவட்ட இணைப்பாளர் ப.மதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை- உமநகரி மற்றும் அச்சங்குளம் வீதிகள் தலா 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொங்கிறீட் வீதியாகச் சீரமைக்கப்பட்டு வருகின்றது. (த-56)





யாழ்ப்பாணம், ஒக். 3

ஈழத்து சீரடி சாய் என அழைக்கப்படும் நல்லூர் நாவலர் வீதி மடத்தார்பதி சீரடி சாய் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருவிழா நடைபெற்று எதிர்வரும் 12ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த திருவிழா வும் இடம்பெறவுள்ளன. (ஐ)

### நவராத்திரி நிகழ்வு

அளவெட்டி, ஒக். 3

அளவெட்டிபொது நூலகத்தின் நவராத்திரி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நூலக மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-36)

### திருக்குறள் நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களம் இளைஞர் விவகார அமைச்சால் வெளியிட்டப்பட்ட திருக்குறள் நூல் அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முதன்மை மண்டபத்தில் காலை 8 மணிக்கு பீடாதிபதி சு.பரமானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## பெருமழை காரணமாக நெற்செய்கை பாதிப்பு

### விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் பெய்த பெருமழையால் காலபோக நெற்பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தவருட நெற்பயிர்ச்செய்கை தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட விவ சாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனா தேவி சிறிரங்கன் தெரிவித்ததாவது, யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான நெற்பயிர்ச் செய்கை தொடர்பான உத்தேச இலக்கு 11ஆயிரத்து 500 ஹெக்ரேயர். அதில் இதுவரையில் 8ஆயிரம் ஹெக்ரேயரில் நெல்விதைப்பு நிறைவடைந்துள்ளது. மழை வெள்ளம் நெல் விதைப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தென்மராட்சியில் தனன்கிளப்பு மற்றும் அதனைச் சார்ந்த தாழ்நில வயல் பகுதிகள், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மற்றும் வடமராட்சிப் பகுதியில் தாழ்நில வயல் பகுதி என்பனவற்றில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நெல் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. சில நாள்களாக மழை இல்லாத நிலை காணப்படுவதால் வயல் நிலங்களில் வெள்ளம் வற்றுவதுடன் விவசாயிகள் விதைப்பு செய்வதற்குத் தயாராக உள்ளனர் எனத் தெரிவித்தார்.

வறட்சியால் வயல் நிலங்களை நெல் விதைப்பதற்கு ஏற்ற முறையில் பயன்படுத்துவதற்கு விவசாயிகளால் முடியவில்லை. (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லியனகேயும் தேர்தல்கள் களத்தில்

கொழும்பு, ஒக். 3
கட்டாருக்கான முன்னாள் தூதுவரும், சிறிலங்கா தொழிற்கட்சியின் தலைவருமான ஏ.எஸ்.பி. லியனகேயும் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.
2017ஆம் ஆண்டு கட்டாருக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட ஏ.எஸ்.பி. லியனகே, டுபாய் சென்ற யோசித ராஜபக்ச, றோகித ராஜபக்ச ஆகியோரின் பயணப்பையை தூக்கிச் சென்ற படங்கள் வெளியானதை அடுத்து, பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.
2010, 2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தல்களில் போட்டியிட்ட ஏ.எஸ்.பி. லியனகே, 2010ஆம் ஆண்டு தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் மூன்றாவது அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். (ஒ.5)

## சட்டவிரோத சிகரெட்டுடன் ஈரானியர் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 2
சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 600 சிகரெட்டுக்களுடன், ஈரான் நாட்டைச் சேர்ந்த ஒருவர், அப்புத்தளைப் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
அப்புத்தளைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து விரைந்த பொலிஸார், டயரபா பெருந்தோட்டப் பகுதியிலிருந்து, மேற்படி ஈரான் நாட்டுக்குடிமகன் கைது செய்யப்பட்டதுடன், சட்டவிரோத 2 ஆயிரத்து 600 சிகரெட்டுக்களும் மீட்கப்பட்டுள்ளன.
கைது செய்யப்பட்ட ஈரான் நாட்டுக் குடிமகன், உமா ஓயா வேலைத்திட்டத்தில் சேவையாற்றி வந்த நபரென்றும், மீட்கப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி ஒன்றரை இலட்சம் ரூபா என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5)

# விதியை மீறினால் கடும் நடவடிக்கை

## தேர்தல்கள் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 3
அரச தலைவர் தேர்தலில் சட்டவிதிகளை மீறி பரப்புரை, விளம்பரங்களை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மகிந்த தேசப்பிரிய கடுமையாக எச்சரித்துள்ளார். இந்தத் தேர்தலின்போது சட்டவிதிகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்போவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.




தேர்தல் செயலகத்தில் ஊடக மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதலாவது ஊடக சந்திப்பை நடத்திய ஆணைக்குழுத் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்ததாவது:
தேர்தல் காலப் பகுதியில் எந்தவிதமான முறைகேடுகளுக்கும் இடமளிக்கப் போவதில்லை. சட்டம் எதைச் சொல்கின்றதோ அதை உரிய முறையில் நடைமுறைப்படுத்த உறுதிபூண்டிருக்கின்றோம்.
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பிலும், கட்சிகளைப் பிரபலப்படுத்தும் விதத்திலும் வீதிகளின் இருமங்குகளிலும் இலத்திரனியல் விளம்பரப் பலகைகள் மற்றும் சினிமாத் திரையரங்குகளில் விளம்பரக் காட்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் சட்டவிதிகளின்படி இலத்திரனியல் விளம்பரப் பலகை, திரையரங்க விளம்பரம் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
இந்த அறிவித்தலின் பின்பும் அது போன்ற செயற்பாடுகள் தொடருமானால் அவற்றோடு தொடர்புபட்டவர்கள் மீது தேர்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது - என்றார். (ஒ.5)

## வட பகுதியில் இராணுவத்தினர் நீறுபூத்த நெருப்பாகவேயுள்ளனர்

### சிவமோகன் எம்.பி. தெரிவிக்கிறார்

மன்னார், ஒக். 3
வடக்கில் சிங்கள இராணுவத்தினர் நீறு பூத்த நெருப்பாக உள்ளனர். இந்த நிலமை மாறுமாகவிருந்தால் எந்தநேரமும் தமிழர்கள் மீது பாயத் தயங்கமாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய சமாதான சூழலில் தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் இருப்பதைப் பார்க்கும் இராணுவத்தினர் உள்ளுக்குள் கொதித்துக் கொண்டும் வெளியில் சாந்தமான முகத்தை காட்டியபடியும் உள்ளார்கள். உண்மையைச்சொல்லப்போனால் தமிழ் மக்கள் நிம்மதியாக இருப்பதை இராணுவத்தினரும் பௌத்த பிக்குமாரும் விரும்பவில்லை.
மக்கள் இராணுவத்துக்கு எதிராகக் குற்றஞ்சாட்டி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். சரியான சந்தர்ப்பம் ஒன்றை இராணுவத்தினர் எதிர்பார்த்துக் காத்து நிற்கிறார்கள். சந்தர்ப்பம் அமைந்தால் அவர்களின் கோர முகத்தைக் காட்டுவார்கள்.
2015க்கு முன் மாவீரர் தினமோ நினைவேந்தல் நிகழ்வுகளோ நடத்த முடியாத நிலை இருந்தது. 2015 ஆட்சி மாற்றத்தின் பின் படிப்படியாக மாற்றம் கண்டு இன்று ஜனநாயக சூழலில் மக்கள் வாழ்கின்றனர்.
புலம்பெயர் தமிழ் மக்கள் சுதந்திரமாக இங்கு வந்து போகும் நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. புலனாய்வாளர்கள் என்ற போர்வையில் செயற்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கும் இராணுவத்தினரின் மனங்கள் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளன. மீண்டும் சந்தர்ப்பம் வருமாக இருந்தால் மீண்டும் ஒருஅடக்குமுறையைதமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடுவார்கள். ஆகவே தமிழ்மக்கள் அரசதலைவர் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். ஜனநாயகம் மிகுந்தவர்களை தலைவர்களாகத் தெரிவுசெய்ய வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (த-213)



நன்றி அவந்த ஆட்டிகல

## சஜித்தின் தெரிவுக்கு மனோ அணி ஆதரவு

ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தெரிவுக்கு, தலைவர் மனோ கணேசன் தலைமையில் கூடிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு ஏகமனதாக அனுமதியை வழங்கியது.
கொழும்பில் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சு கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டது.
மேலும், தேர்தல் அறிக்கையில் இடம்பெறவேண்டிய விவகாரங்கள் தொடர்பிலும், சஜித் பிரேமதாசவுடன் ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய உடன்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
தலைவர் மனோ கணேசன் தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தில் பிரதிதலைவர்கள் பழனிதிகாம்பரம், வி.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேலுகுமார், அரவிந்த குமார், பொதுச் செயலர் சந்திரா சாப்டர், பிரதி செயலர் சண் பிரபாகரன், அந்தனி லோரன்ஸ், கே.டி குருசாமி, சிறிதரன், சரஸ்வதி சிவா, உதயகுமார், புத்திர சிகாமணி, அனுஷா சந்திரசேகரன், விஜயசந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ.5)

# ‘தேர்தல் குண்டு’ போட்ட கம்லத்தின் பதவி பறிப்பு?

கொழும்பு, ஒக். 3
நீதியமைச்சில், சாட்சியங்களைப் பாதுகாக்கும் அதிகார சபையின் தலைவரான முன்னாள் பிரதி சொலிசிடர்ஜெனரல்சுஹாத கம்லத் பதவிநீக்கம் செய்யப்படுவார் என்று நீதியமைச்சர் தலதா அத்துகோரள அறிவித்துள்ளார்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவும் ராஜித சேனாரத்னவும் தனக்கு கடும் அழுத்தம் கொடுத்ததாக சாட்சிகளை பாதுகாப்பதற்கான அதிகார சபையின் தலைவரான முன்னாள் பிரதி சொலிசிடர் ஜெனரல் சுஹாத கம்லத், ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.
அரச தலைவர் தேர்தல் களம் சூடு பிடித்துவரும் நிலையில் அவரது இந்த நேர்காணல் தென்னிலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.
இந்த நிலையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுஹாத கம்லத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதியமைச்சர் தலதா அத்துகோரளவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் அவரைப் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.
‘சுஹாத கம்லத் என்கிற நபரது தனிப்பட்ட அரசியல் நோக்கம் பற்றி எனக்குப் பிரச்சினை கிடையாது. எனினும் அவர் நீதியமைச்சில் உள்ள சந்தேகநபர்கள் மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அதிகார சபையின் தலைவராக கடமையாற்றுகின்றார். அவரை அந்தப் பதவிக்கு முன்னாள் நீதியமைச்சரான விஜேதாச ராஜபக்ச நியமனம் வழங்கியிருப்பதோடு அந்தப் பதவியிலேயே தொடர்ந்தும் இருந்தும் வருகின்றார்.
அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேனவின் ஊடாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அரச அதிகாரி ஒருவர் குறிப்பாக அரச நிர்வாகத்தில் இருப்பவர் சாட்சிகளை பாதுகாப்பதற்கான அதிகார சபைத் தலைவருக்கு தனது அரசியல் நோக்கம் என்னவாக இருந்தாலும் அதனை ஊடகங்கள் முன்பாக வெளியிட முடியாது. இது குறித்து நான் அரச தலைவர் மைத்திரிபாலவிடம் வேண்டுகோள் முன்வைத்தேன். அவரைப் பதவியிலிருந்து விலக்குமாறு, அரச தலைவர் தனது செயலருக்கு தெரியப்படுத்தியிருக்கின்றார்’- என்றார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நியமனங்களை வழங்கமாட்டேன் என்று சஜித் பிரேமதாச உறுதியளிப்பாரா?

*சவால் விடுக்கிறார் மற்றொரு வேட்பாளர் அநுர*

கொழும்பு, ஒக். 3

அரச தலைவராக நியமிக்கப்பட்டால் அரசியல் நியமனங்களை வழங்கமாட்டேன் என்று முடிந்தால் வாக்குறுதி அளிக்குமாறு தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு சவால் விடுத்துள்ளார்.



மொனராகலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு சவால் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றத்தில், திருடர்களைப்பிடிப்பதையே மக்கள் எதிர்பார்த்தனர். குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரையில் மக்கள் காத்திருந்தனர். எனினும் முறையான முறைப்பாடுகள் கிடைக்கவில்லை.

இதுபோன்ற முறைப்பாடுகளை இலஞ்ச ஆணைக் குழுவில் தாக்கல் செய்யலாம்.

முறைப்பாடு இல்லாமல் விசாரணை செய்ய முடியாது. வீடமைப்பு அமைச்சில் ஏதாவது ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருந்தால் அதன் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக சஜித் பிரேமதாசவால் முறைப்பாடு செய்ய முடியும்.

அவரிடம் முன்னாள் அமைச்சரின் ஆவணங்கள் அனைத்தும் உள்ளன. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியினர் எவரும் முறைப்பாடுகளை முன்வைக்கவில்லை. எனினும், எமது கட்சியின் வசந்த சமரசிங்க உள்ளிட்ட உறுப்பினர்கள் 130 முறைப்பாடுகளை இலஞ்ச ஆணைக்குழுவில் தாக்கல் செய்துள்ளனர்.

சஜித் பிரேமதாசவால் சிறிய வீதிகளில் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாத பயிர் நிலங்களில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக நில பயன்பாட்டுக் கொள்கையைத் தயாரிக்க வேண்டும் - என்றார். (ஒ.5)

## ரணில் அரசியலில் "கிங்"

*நெருங்கிய சகாக்களுக்கு விளக்கினாராம் மகிந்த!*

கொழும்பு, ஒக்.2

ரணில்என்றால்அரசியலில்கேம்கிங். அடுத்த ஆள் மங்கள பெரும் சதிகாரர் என்று தனது நெருங்கிய சகாக்களிடம் கூறியுள்ளாராம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச. ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச அறிவிக்கப்பட்ட பின்னர், தனது இல்லத்தில் நெருங்கிய சகாக்களுடன் உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று தெற்கு இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நான் இதை முதலிலேயே சொன்னேன். பசிலும், கோத்தாவும் அதைப் பெரிதுபடுத்தவில்லை. அவர்கள் ஐ.தே.க. நான்கு, ஐந்தாக உடைந்து சிதறும் என்று நினைத்தார்கள். உடையும் விதத்தை எனக்குக் கணக்குப் போட்டும் காட்டினார்கள். ரணில் என்றால் அரசியலில் கேம் கிங். அடுத்த ஆள் மங்கள. சதிகாரர். அவர்கள் இரண்டு பேரும் சஜித்தை வைத்து ஆடிய கூத்தை எங்கள் ஆட்கள் நம்பினார்கள். நாடே அகப்பட்டது.

இதை சஜித் அறிந்திருக்கவில்லை. அவர் வெறுமனே மிதந்தவர் தான். சஜித்தை அரச தலைவர் வேட்பாளராக்க முன்னரே மனதுக்குள் நினைத்தி ருந்த ரணில், மோடி இலங்கை வந்தபோது அவரது பயண ஏற்பாடுகளைக் கவனிக்க சஜித்தை அங்கே நுழைத்தார். அந்த ஒரு நாளைக்கு மட்டும்தான் சஜித்துக்கு அந்தப் பொறுப்பையும், பதவியையும் கொடுத்தார். அங்குதான் அவர் தனது வேலையை ஆரம்பித்தார். அது ஒரு முரண்பாடுபோல வெளியே தெரியத் தொடங்கியுள்ளது. எங்கள் ஆள்கள் அதை நினைத்துச் சந்தோசப்பட்டனர். நாங்கள் கோத்தாவை வேட்பாளராக அறிவித்தபின்னர்தான் சஜித்தின் கூத்தை அரங்கேற்றினார். அது கோத்தபாயவின் பரப்புரைகளைப் பின் தள்ளியது. ஊடகங்கள் ரணிலா? கருவா? சஜித்தா? என்று செய்திகளைப் போட்டுக் கொண்டிருந்தன. அதுவே தொடர்ந்து தலைப்புச் செய்தியானது. எல்லோரும் கோத்தாவை மறந்து போனார்கள். அந்த ஆள் தேர்தல் திகதி அறிவிக்கும் வரையில் இதை இழுத்துக் கொண்டு போனார். சஜித்துக்கென ஆதரவுக் கூட்டங்கள் எல்லா இடத்திலும் ஆரம்பமானது. ஐ.தே.கவை வெறுத்து ஒதுங்கியிருந்த ஆதரவாளர்கள் இதனால் கிளர்ந்து எழுந்தார்கள். ஆதரவாளர்கள் திரும்ப நிறைந்தனர். சிதறிக் கிடந்த ஐ.தே.கவினர்கூட ஒன்றாகச் சேர்ந்தது மட்டும்தான் நடந்துள்ளது. நல்ல உதாரணம் திஸ்ஸ அத்தநாயக்க. இந்த ஆள் சஜித்தோடு சேர்ந்து இப்போது விழுந்து விழுந்து வேலை செய்யத் தொடங்கியிருக்கிறார்.

சஜித் வேட்பாளரானதுபோல எந்தவொரு கடினமும் இல்லாமல் ஐ.தே.கவுக்கு விளம்பரம் மட்டுமல்ல ஆதரவும் கிடைத்துள்ளது. ஐ.தே.கவில் அத்தனை பிரச்சினை இருந்திருந்தால் ஐ.தே.கவில் உள்ள தொழிலாளர்கள் பிரச்சினை எழுப்பியிருக்க வேண்டுமே. அது இல்லையே?. எங்களுடைய ஆள்கள் ஐ.தே.க. உடையும் என்று மட்டும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது ஆட்டுக்கு பின்னால் போன நரியின் கதை போன்றது. என்னாலேயே முடியாதது இந்த பண்டிதர்களால் முடியுமா? என்று தனது நெருங்கிய சகாக்களுக்கு அரசியல் பாடம் நடத்தியுள்ளார் மகிந்த ராஜபக்ச–என்றுள்ளது. (எ-22)

## நிர்வாகசேவைப் பணியாளர்களுக்கு பொதுவான கொடுப்பனவுக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 3

சேவைக் காலத்தைக் கருத்தில் கொள்ளாது, சகல நிர்வாக சேவைப் பணியாளர்களுக்கும் பொதுவான கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு முன்னர், சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, மூவாயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே, சேவைக் காலத்தைக் கருத்தில் கொள்ளாது, சகல நிர்வாக சேவைப் பணியாளர்களுக்கும் பொதுவான கொடுப்பனவை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச பிரிவுகளில் காணப்படும் சம்பளப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவுக்கும், அரச நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்தே, இவ்வாறு கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இதேவேளை-உயிரிழந்த இராணுவத்தினரின் மனைவியினருக்கு இராணுவ அடிப்படைச் சம்பளத்தை ஓய்வூதியமாக வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஒ.5)

## அதிபர் நேர்முகத் தேர்வில் குளறுபடிகள் நடந்துள்ளன

*பாதிக்கப்பட்டோர் ஆணைக்குழுக்களில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், ஒக்.3

அதிபர் சேவை தரம் மூன்றுக்கு நியமனம் செய்வதற்காக இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைத் தெரிவுகள் குளறுபடியாகவும் அதிபர் சேவை பிரமாணத்துக்கு முரணாகவும் உள்ளன என்று குற்றஞ்சாட்டி, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட தமிழ்மொழி மூலமான ஆசிரியர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் கடந்த 27ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளனர்.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களும் ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதிபர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெற்றது. தமிழ்மொழி மூலமான அதிபர் பதவிகளுக்குப் பலவெற்றிடங்கள் உள்ளன. ஆனால் தெரிவுகளில் இடம்பெற்ற முறையற்ற தன்மையில் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றனர் என்று முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## தேசிய பாதுகாப்பை கோத்தாவாலேயே உறுதிப்படுத்த முடியும்

*பசில் நம்பிக்கை*

கொழும்பு, ஒக். 3

கோத்தபாயவால் மாத்திரமே நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

எல்பிட்டியபிரதேசத்தில்மக்கள்சந்திப்பில்உரையாற்றிய போது அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டுமக்களின்பாதுகாப்பைஉறுதிப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய கோத்த பாயவால் மாத்திரமே முடியும் எனவும் பசில் ராஜபக்ச கூறியுள்ளார்.

அத்துடன், கோத்தபாயவைக் கண்டு ஒரு தரப்பினர் தற்போது அச்சமடைந்துள்ளதாகவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (ஒ.5)

## திறமான அபிவிருத்தி மகிந்த காலத்திலேயே

*முன்னாள் எம்.பி. கூறுகிறார்*

முல்லைத்தீவு, ஒக். 3

மகிந்த ராஜபக்ச அரசதலைவராக இருந்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் திறமையான முறையில் அபிவிருத்திகள் நடந்தன. அதன்பின்னர் வந்த அரசதலைவரோ தலைமை அமைச்சரோ அபிவிருத்திகளைச் செய்யவில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கடற்கரை வீதியில் அமைந்துள்ள பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்களுடான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

தமிழர்களின் பிரச்சினையைத் தொடங்குவதற்குயார்காரணம்என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழர்களின் பிரச்சினைகள் உருவாவதற்கு காரணம் ஐக்கியதேசியக்கட்சிஅரசு. யாழ்ப்பாணத்திலுள்ள நூல் நிலையம் எரிக்கப்பட்ட போது அன்று இருந்தது ஐக்கிய தேசிய கட்சி அரசே. சிங்களப் பகுதிகளிலிருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்ட போது இருந்ததும் அதே அரசுதான். புலிகள் அமைப்பிலிருந்து கருணாவை மாற்றி அமைத்த அரசும் ஐ.தே.காதான். இவ்வாறுதமிழ்மக்களுக்கு தெரியாத பல நரிவேலைகளை ஐக்கியதேசியக்கட்சிஅரசுமேற்கொண்டது. மட்டக்களப்புகல்முனையில்பிரதேச சபைக்கு அதிகாரத்தைக் கொடுக்க முடி யாமல் இருக்கின்றதும் இந்த அரசுதான் என்று தெரிவித்தார். (து-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்து மூலமான ஒப்பந்தம் தேர்தல் காலத்தில் எதற்கு?

## அது ஏமாற்றுவேலை என்றும் கூறுகிறார் கோத்தா ஆதரவு முன்னாள் ஆளுநர் குரே

மன்னார், ஒக். 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் காலங்களில் மாத்திரம் எழுத்து மூல ஒப்பந்தம், உடன் படிக்கை என்று கோருவது ஏமாற்றுவேலை. ஒப்பந்தங்கள் உடன் படிக்கைகள் பற்றிப் பேச முதல் கலந்துரையாட முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

அரசதலைவர் வேட்பாளராகப் போட்டியிடும் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவாக மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மாத்திரமல்ல தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த வரலாற்றில் எத்தனை தடவைகள் இவ்வாறான ஒப்பந்தங்கள் எழுதி எடுத்துள்ளனர். பண்டாரநாயக்கவுடன் மேற்கொண்டனர். அது கிழித்துப் போடப்பட்டது. சந்திரிகா நாடாளுமன்றில் ஒரு வரைவைக் கொண்டு வந்தார்.

அதுவும் கிழித்துப்போடப்பட்டது. அவ்வாறான எழுத்துமூல ஒப்பந்தம் மாத்திரம் போதுமா? நம்பிக்கை தான் முக்கியமாக தேவை.

தேர்தல் காலங்களில் ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்தவர்கள் இவ்வாறு கோருகின்றனர்? 5 வருடம் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு தேர்தல் வந்தபிறகு தான் இந்த எழுத்து கதை வருகின்றது. எழுத்துமூல ஒப்பந்தத்தில் என்ன கோருகின்றார்கள் என்பது தெரியாமல் நாங்கள் எவ்வாறு தீர்மானிப்பது. முதலில் கலந்துரையாடல் நடத்த முன்வரட்டும். அதன்பின்னர் மற்றவற்றைச் செய்ய முடியும்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு தமிழ் மக்களின் மிகப் பெரிய ஆதரவு தேவை.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவால் ஒன்றும் செய்ய முடியாது. அவருக்கு தேசிய ரீதியில் ஆதரவு இல்லை - என்றார்.

(து-56)

# கேந்திர போக்குவரத்து மைய நிலையம் கண்டியில்

கொழும்பு, ஒக். 3

கண்டியில் போக்குவரத்து கேந்திர நிலையம் அமைக்கப்படவுள்ளது. பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

10 பில்லியன் ரூபா பெறுமதியில் இது அமைக்கப்படவுள்ளது.

அடுத்த இரண்டரை வருடங்களில் கேந்திர நிலையம் அமைக்கப்படவுள்ளதாகவும் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் போக்குவரத்து வீதிகள் விரிவாக்கப்படவுள்ளதுடன் அதிவேக வீதிகளும் அமைக்கப்படவுள்ளன, - என்றார். (ஒ.5)

# ஐ.ம.சு.மு. முன்னாள் அமைச்சர்கள் சஜித்துடன் சங்கமம்

கொழும்பு, ஒக். 3





முன்னாள் அமைச்சர் அதாவுத செனவிரத்ன மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் டபிள்யு.பி.ஏக்கநாயக்க ஆகியோர் ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினர். செனவிரத்ன மற்றும் ஏகநாயக்க இருவரும் பதவியில் இருந்த காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களாக இருந்தனர். அதாவுத செனவிரத்ன கிராமிய விவகார மூத்த அமைச்சராகவும் டபிள்யு.பி.ஏக்கநாயக்க நீர்பாச னத்துறை பிரதி அமைச்சராகவும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# சி.வி.விக்னேஸ்வரனின் சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டது

## கூட்டமைப்பின் சிவமோகன் எம்.பி. பதிலடி

மன்னார், ஒக். 3

விக்னேஸ்வரன் எதற்காக சிங்கள தேசத்தால் களம் இறக்கப்பட்டாரோ அதைச் செய்யத் தொடங்கிவிட்டார் என்பது கோத்தபாயவுக்கு வக்காளத்து வாங்குவதிலிருந்து தெரிகிறது.

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் சாயம் வெளுக்கத் தொடங்கியிருக்கிறது. அவர் கொழும்பு செல்வதற்கு வாகனத்தைத் தயார்ப்படுத்தட்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

"கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றால் தமிழ் மக்களுக்கு அது நன்மையாகவே அமையும். முன்பு போல் அவர் அடக்கு முறைகள் செய்யமாட்டார்" என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியி ருக்கிறார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது சிவமோகன் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்கள் பட்ட துன்பங்கள், கொழும்பில் சொகுசு பங்களாவில் இருந்துகொண்டு சிங்கள தேசத்துக்கு சாமரம் வீசிய முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வ ரனுக்குத் தெரியுமா?

எதையும் அறியாத ஜீவன்களை அரசியலுக்கு இழுத்து வந்ததால் நாங்கள் இப்படியான வார்த்தைகளைக் கேட்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது மக்களைக் கொத்துக் குண்டுகளால் கொன்றமை விக்னேஸ்வரனுக்குத் தெரியுமா?

எமது பல்லாயிரக்கணக்கான போராளிகள் தாங்கள் கொண்ட கொள்கைக்காக உயிர்களை ஆகுதியாக்கியதன் அர்த்தம் இவருக்குப் புரியுமா?

நயவஞ்சகத் தனமாக பொக்கணை எல்லையில் போர்நிறுத்த பிரதேசத்தை ஊடறுத்து எமது மக்கள் மீது குண்டு போட்டது இவருக்குத் தெரியுமா?

எமது மக்கள் உண்ண உணவில்லாமல் குழந்தைகளுக்கு பால்மா வாங்குவதற்காக ஐ.நா. வாகனங்களைச் சூழ்ந்தபோது வானூர்திக் குண்டு வீச்சில் இறந்துபோன மக்கள் எத்தனை பேர் என்று இவருக்குத் தெரியுமா?

இவற்றில் எதையும் அனுபவிக்காத மனிதன் தமிழ் மக்களின் தலைமைத்துவத்துக்கு ஆசைப்படலாமா?

வானூர்தி மற்றும் ஆட்லறிக் குண்டு வீச்சில் சிதைந்த எத்தனையோ ஆயிரம் மக்களின் கைகால்களை அகற்றி அறுவைச் சிகிச்சைகள் செய்த எங்களுக்குத் தான் அந்த வலி புரியும். விக்னேஸ்வர னுக்கான காலம் மிகவும் குறுகியது. எண்ணி வைத்துக் கொள்ளுங்கள். கொழும்பு செல்வதற்கு உங்கள் வாகனத்தை ஆயத்தப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு கல்வி தந்து கௌரவமான வேலை தந்து, சொகுசான வாழ்வு தந்த சிங்கள தேசத்துக்கு கொழும்பில் இருந்தபடி சேவை செய்வதற்கு விக்னேஸ்வரன் தயாராக இருக்க வேண்டும்- என்றார். (து-213)

# அரங்க விழா

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் வெறுவெளி வழங்கும் அரங்கவிழா நாளை வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் க.ரதிதரன் நெறியாள்கையில் 'காலமாகிவிட்டது' என்றஆற்றுகை நடைபெறவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யானைகள் மீதுள்ள அக்கறை மனிதர்களுக்கு இல்லையா?

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஆதங்கம்

வவுனியா,ஒக்.3

காணாமற் போன யானைகளைக் கண்டுபிடிக்க விசாரணைக்குழு அமைத்த அரசு, காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க என்ன செய்தது?. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. அதில் அவர் தெரிவித்ததாவது:

இறுதிக்கட்டப் போர் நிறைவடைந்ததன் பிற்பாடு ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் அனுசரணையோடு பல ஆயிரக்கணக்கான போராளிகளும் , பொதுமக்களும் குடும்பம் குடும்பமாக இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

போர் நிறைவடைந்து பத்து வருடங்கள் கடந்த நிலையில், சரணடைந்த குடும்பத்தினருக்கு என்ன நடந்தது? அவர்களுடன் சென்ற கைக்குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

இவை தொடர்பில் இதுவரைக்கும் இலங்கை அரசோ அல்லது ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையோ சரியான பதிலைத் தெரிவிக்கவில்லை.

இலங்கையில் 9 பெண் யானைகள் காணாமற் போய்விட்டன என்பதற்காக, ஓர் விசாரணைக் குழுவை அரசு நியமித்திருந்தது. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் அனுசரணையோடு, ஆதரவோடு, வெள்ளைக் கொடியோடு சரணடைந்த போராளிகள், பொதுமக்கள், அவர்களுடைய குடும்பத்தினர், குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையை ஏமாற்றியுள்ளது. இங்கிருக்கின்ற மக்களை ஏமாற்றியுள்ளது. சரணடைந்த காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள், குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்பதை காலம் கடத்தாமல் விரைவாக தெரியப்படுத்தி, ஒரு நீதியைப் பெற்றுத் தர வேண்டும்- என்றார். (க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஒக. 3

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட நாவாந்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

இதன்படி இன்று வியாழக்கிழமைகாலை9மணிதொடக்கம்மு.ப11மணிவரைஆசாத் வீதியிலும், மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1.30 மணி வரை 1,2,3 ஆம் குறுக்குத் தெரு நாவலர் வீதிக ளிலும் ,பிற்பகல்2.30மணிதொடக்கம் 4 மணி வரை சேமக் காலைவீதி, கெனடிவீதிஆகியவற்றில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

குறித்த தடுப்பூசிகளுக்கான உரிமக்கட்டணமாக 30ரூபா அறவிடப்படும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ)

# விவசாயக் கண்காட்சியை 70 ஆயிரம் பேர் பார்த்தனர்

*யாழ்ப்பாணம், ஒக். 3*

*யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் கடந்த மாதம் நடந்த 2019 ஆம் ஆண்டுக்கான மாகாண விவசாயக் கண்காட்சியை 70 ஆயிரம் பேர் பார்வையிட்டுப் பயன் பெற்றுள்ளனர் என்று மாகாண விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.*



"காலநிலை மாற்றத்தை எதிர் கொண்டு நஞ்சற்ற உணவு உற்பத்தியில் தன்னிறைவு நோக்கி" என்னும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி கடந்த மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 4 நாள்கள் நடைபெற்றது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கண்காட்சி இடம்பெற்றது. கண்காட்சியில் விவசாயத் தகவல் மையம், நாற்று மேடை தொழில்நுட்பம், கொள்கலன் பயிர்ச் செய்கை, சேதன விவசாயம், கிராமப்புற, நகர்ப்புற மற்றும் அலுவலக வீட்டுத் தோட்டம், காளான் செய்கை, பூச்சி உட்புகா வலையினுள் வினைத்திறனான பீடை முகாமைத்துவத்துடன் நிலத்தடி நீர் பாவனைக்கான தொழில்நுட்பம், கால்நடை வளர்ப்பு என 44 வகையான காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் காட்சியை சுமார் 70 ஆயிரம் பேர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். 320 பாடசாலைகளில் இருந்து சுமார் 20 ஆயிரம் மாணவர்களும் , 50 ஆயிரம் பொதுமக்களுமாக இவற்றைப் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர்.

கடந்தமுறை நடைபெற்ற மாகாண விவசாயக் கண்காட்சியை சுமார் 60 ஆயிரம் பேர் வரையில் பார்வையிட்டனர். கடந்த முறையைவிட இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையிலானோர் கண்காட்சியைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)



## குருதி மாதிரி பரிசோதனை பிரிவு பேசாலையில் நேற்றுத் திறப்பு

மன்னார், ஒக். 3

பேசாலை பிரதேச மருத்துவமனையில் பல வருடங்களின் பின்னர் நேற்றுக் குருதி மாதிரி பரிசோதனை பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேசாலை பிரதேச மருத்துவமனை மூலமாக சுமார்10 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயனடைகின்றனர்.

எனினும் குருதிப் பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கே சென்று வந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைவாக குறித்த பிரிவு அமைக்கப்பட்டு பேசால்ல பிரதேச மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் இ.ஈட்டன் பீரிஸ் வைபவரீதியாக குருதி மாதிரிப் பரிசோதனைப் பிரிவை ஆரம்பித்து வைத்தார். (த-56,222)

# பம்பைமடு வளாகத்தில் பன்னாட்டு ஆய்வு மாநாடு

வவுனியா, ஒக். 3

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு ஆய்வு மாநாடு, பம்பைமடுவில் அமைந்துள்ள வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.



'நாளைய புதுமைக்கான சிறப்பம்சம்' எனும் கருப்பொருளில் இடம்பெற்ற மாநாட்டில் பல நாடுகளில் இருந்தும், இலங்கையின்பல பாகங்களிலுமுள்ள, பல்கலைக்கழகங்களிலிருந்தும் வருகை தந்த பல்வேறுதுறைகளைச்சார்ந்த ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளின் முடிவுகளை திறம்படத் தொகுத்து வழங்கினார்.

மாநாட்டில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டஆய்வுக்கட்டுரைகள்வெளியிடப்பட்டன. ஆய்வுசுருக்கங்களும் முன்வைக்கப்பட்டன. வரவேற்புரையை ஆய்வு மாநாட்டின் ஏற்பாட்டாளர் கலாநிதி. ச. விஜயமோகன் நிகழ்த்தினார்.

மாநாட்டின்சிறப்புப்பேச்சாளர்களாக பேராசிரியர்பீட்டர்காண்ஸ்(ஆர்தஸ் பல்கலைக்கழகம்டென்மார்க்), பேராசிரியர் நோபிள் சுரேந்திரன்(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் சிறிசற்குணராஜா (யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்), பேராசிரியர் சிறிஸ்கந்தராஜா(சுவீடன்விவசாயப் பல்கலைக்கழகம்) ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். சூழலியல் விஞ்ஞானம், வர்த்தக முகாமைத்துவம், கணக்கியலும் நிதியியலும் கணினியியலும், தகவல்விஞ்ஞானம், ஆங்கில இலக்கிய மும்மொழியியலும்போன்றவிடயங்கள் தொடர்பாக தொகுப்புரைகள் வழங்கப்பட்டன.

மாநாடானது ஆய்வு சார் திறமைகளைப் பகிர்வதற்கான ஊடகமாகவும் உலகளாவிய, நாடளாவிய ரீதியில்உள்ளபல்கலைக்கழகஆய்வாளர்களை ஒன்றிணைக்கும் ஒரு சிறந்த வலையமைப்பை உருவாக்கும்தளமாகவும்அறிவைவளர்த்துக் கொள்வதற்கான தளமாகவும் அமைந்திருந்ததுஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் சிறப்பாக (5ஜி) தலைமுறை அலைவரிசைப் பாவனை தொடர்பான விஞ்ஞான ரீதியான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

வவுனியா வளாகத்தின் முதல்வர் ரி.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் யாழ் பல்கலைக்கழகத்தின்தகுதிவாய்ந்த அதிகாரி கே.கந்தசாமி, பல்கலைக் கழகப்பேராசிரியர்கள், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். (க-110)

## அதிக சத்தமாகப் பாடல் ஒலிபரப்பிய முச்சக்கரவண்டிச் சாரதிக்கு தண்டம்

சாவகச்சேரி, ஒக். 3

முச்சக்கரவண்டியில் பாடல்களை உரத்த ஒலியில் ஒலிபரப்பியவாறு சென்ற சாரதி, சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று எச்சரிக்கை செய்யப்பட்டார். அவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

கொடிகாமம்பொலிஸார்தாக்கல்செய்தவழக்குநேற்றுவிசாரணைக்கு வந்தது. தன் மீதான குற்றத் ஏற்றுக்கொண்டார். அதனால் அவருக்கு எச்சரிக்கை விடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை- வீதியில் போக்குவரத்து விதிமுறை மீறிய (வெள்ளைக்கொட்டுக்குஅப்பால்உந்துருளியைச்செலுத்திச் சென்ற) மற்றொருவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த-9)

### மன்னார் மாதிரிக் கிராமத்தில்

# அமைச்சர் சஜித் திறந்து வைத்த கல்வெட்டு உடைக்கப்பட்டுள்ளது

மன்னார், ஒக். 3

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தோட்டவெளியில் ஜோசப்வாஸ் நகர் மற்றும் ஜோசப்புரம் ஆகிய இரு மாதிரிக் கிராமங்களில் அமைக்கப்பட்டிருந்த கிராமங்களுக்கானவரவேற்புக்கல்வெட்டு இனந்தெரியாதோரால் நேற்று உடைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அண்மையில் அமைக்கப்பட்ட இந்தக் கல்வெட்டை அமைச்சர் சஜித் பிரேமதாச திறந்து வைத்திருந்தார். மன்னார், தலைமன்னார்பிரதான வீதி தோட்டவெளி கிராமத்தினூடாக செல்வ[illegible]ாக அமைக்கப்பட்ட [illegible] உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது. உடைக்கப்பட்ட குறித்த கல்வெட்டு சஜித் பிரேமதாச அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சில நாள்களுக்குள் உடைக்கப்பட்டமை மக்கள்மத்தியில்சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (த-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதி

## ஹக்கீமின் வியூகம் இது என்கிறார் முன்னாள் தவிசாளர் பாயிஸ்

*கொழும்பு, ஒக். 3*

*ஐக்கிய தேசிய முன்னணியின் பொது வேட்பாளரான சஜித் பிரேமதாசாவுக்கு நிபந்தனையற்ற முறையில் ஆதரவு வழங்குவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எடுத்த முடிவானது முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கும் தூரநோக்கம்கொண்ட வியூகமாகும். இந்த வியூகத்தை சிலர் விமர்சித்தாலும் காலப்போக்கில் அதன் நன்மை இந்தச் சமூகத்துக்குக் கிடைக்கும். இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் எச்.எம்.எம்.பாயிஸ் தெரிவித்துள்ளார்.*

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முஸ்லிம்களுக்கு எதிரான பெரும்பான்மை சக்திகள் சிலவற்றின் செயற்பாடுகள் காரணமாக முஸ்லிம் சமூகம் இன்று ஒரு வகையான பாதுகாப்பு சிக்கலை எதிர்நோக்கி இருக்கின்றது. அந்தச் சிக்கலை நீக்கி முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது முஸ்லிம் அரசியல் தலைமைகளின் பொறுப்பாகும்.

இந்தப் பொறுப்பை எமது தலைவர் ரவூப் ஹக்கீம் சரியாகவே செய்து வருகிறார். ஸஹ்ரானின் குழுவால் இந்த நாட்டுக்குப் பிரச்சினை ஏற்படுத்தப்பட்டபோது முஸ்லிம் சமூகம் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கியது. அப்போது எமது தலைவர் எடுத்த ஒரு தீர்மானத்தால் எல்லாம் தலைகீழாக மாறியது. முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. அதேபோல்தான் இந்த அரச தலைவர் தேர்தலையும் முஸ்லிம்களின் எதிர்காலப் பாதுகாப்புக் கவசமாக மாற்றுவதற்கு எமது தலைவர் திட்டமிட்டுள்ளார்.

அதற்காக அவர் வகுத்த வியூகம் தான் நிபந்தனைகளற்ற ஆதரவை சஜித் பிரேமதாசாவுக்கு வழங்குவது என்ற தீர்மானம்.

நிபந்தனைகளை விதித்திருந்தால் அது சிங்கள மக்கள் மத்தியில் எதிர்த்தரப்பால் பிழையாக திரிபுபடுத்திக் காட்டப்பட்டிருக்கும். அது சிங்கள மக்கள் முஸ்லிம்கள் மீது கோபம் கொள்ளக் காரணமாக அமைந்து விடும். சஜித் பிரேம தாசாவுக்கான சிங்களவர்களின் வாக்குகளை அது குறைக்கவும் செய்யும்.

கடந்தகாலத் தேர்தல்களில் ஏனைய இனங்களின் தலைவர்கள் நிபந்தனைகள் விதித்து ஒப்பந்தங்கள் செய்த போது அவை சிங்கள மக்கள் மத்தியில் எவ்வாறு பார்க்கப்பட்டன என்பதை அறிவோம்.

எமக்குத் தேவை நிபந்தனைகள் விதிப்பதல்ல. எமது வாக்குகளால் சஜித் பிரேமதாசாவை வெல்ல வைத்து, அதனூடாக முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தான். எங்களின் பாதுகாப்பைத் தவிர வேறு எதற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் நாம் இப்போது இல்லை. முதலில் பாதுகாப்பு. அதன்பின்பே ஏனையவை எல்லாம். காணிப் பிரச்சினைகள், கல்முனை தோப்பூர் செயலகப் பிரச்சினை, சாய்ந்தமருது பிரதேச சபைப் பிரச்சினை, புர்கா, நிகாப் பிரச்சினை, முஸ்லிம் விவாக மற்றும் விகார ரத்து சட்டவரைவு சம்பந்தமான பிரச்சினைகள் போன்றவை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவையாகும். இந்தப் பிரச்சினைகள் முள்ளில் வீழ்ந்த சேலையைக் கழட்டுவது போல் கவனமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

இதைத் தீர்க்கும் விடயத்தில் சிறுபான்மை இனங்களுக்கிடையில் ஒற்றுமை சீர்குலையாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சஜித் பிரேமதாசாவை அரச தலைவராகத் தெரிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுவிடும். அது ஒட்டுமொத்தமாக சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவித்து விடும். ஆகவே, தலைவர் ரவூப் ஹக்கீமின் தீர்மானத்துக்கு ஏற்ப முஸ்லிம்கள் அனைவரும் செயற்பட வேண்டும். எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தலைவரின் வியூகத்தின் பின்னால் அணி திரள்வோம். சஜித் பிரேமதாசாவை வெற்றி பெறச் செய்வோம் - என்றுள்ளது.

(ஒ.5)

# அவிசாளையில் குழு மோதல்

கொழும்பு, ஒக். 3

அவிசாவளை, தல்துவ பகுதியில் இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல், குழு மோதலாக உருவெடுத்ததை அடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

பேருந்தின் சிங்கள சாரதிக்கும் முச்சக்க ரவண்டியொன்றின் முஸ்லிம் சாரதிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலாக மாறியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த மோதல்களில், மூவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இந்த சம்பவத்தையடுத்து அங்கு, சிறப்பு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ.5)

# ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.3

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபை புத்தூர் பொது நூலகத்தால் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சஞ்சிகைக்கு இப்பிரதேசத்துக்கு உட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து கவிதை, கட்டுரை, கதை (இப்பிரதேசத்தை மையப்படுத்தி) போன்ற ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த ஆங்கங்களை கிராம அலுவலர்கள் மூலம் உறுதிப்படுத்தி, நாளைமறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் தவிசாளர்/செயலர் வலி.கிழக்குப்பிரதேசசபை புத்தூர் என முகவரி இட்டு அனுப்பிவைக்கவும்.

அனுப்பப்படும் ஆக்கங்கள் யாவும் சபையின் நடுவர் குழாமால் பரிசீலிக்கப்பட்ட ஆக்கங்கள் மாத்திரமே சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படும்.

அத்துடன் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நீராவியடியில் பிள்ளையார் இல்லை புத்தரே இருந்தார்!

## எஸ்.பி. புதுக் கதை

கொழும்பு, ஒக். 3

முல்லைத்தீவு, நாயாறு பகுதியில் எந்தவொரு இந்து ஆலயமும் இருக்கவேயில்லை. ஆரம்பத்திலிருந்து குருகந்த என்ற பௌத்த விகாரை மாத்திரமே காணப்பட்டது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் உள்ள அவருடைய இல்லத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு, நாயாறு குருகந்த விகாரை தொடர்பில் ஆராய்ந்து அதன் வரலாறு மற்றும் உண்மைத்தன்மையை அறிந்துகொண்ட பின்னரே இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா போன்றவர்கள் கருத்து வெளியிட வேண்டும்.

முல்லைத்தீவு, நாயாறு பகுதியில் எந்தவொரு இந்து ஆலயமும் இருக்கவேயில்லை. ஆரம்பத்திலிருந்து குருகந்த என்ற பௌத்த விகாரை மாத்திரமே காணப்பட்டது. அந்த விகாரையின் விகாரதிபதியே சில இந்து தெய்வங்களின் சிலைகளை குறித்த விகாரையில் வைத்து வழிபட்டார். அதே போன்று இது பௌத்தர்களின் வணக்கத்துக்குரிய இடமாகவே காணப்பட்டது என்பதற்கு வரலாற்று ரீதியாகவும், தொல்பொருள் திணைக்களத்தினதும் ஆதாரங்கள் உள்ளன.

எனவே வரலாற்றையும், உண்மையையும் சரியாக ஆராயாமல் பௌத்த மற்றும் இந்து மதத்தை மையப்படுத்தி சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு எவரும் முயற்சிக்க வேண்டாம் என்றும் கூறினார். (ஒ.5)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்., ஒக். 3

யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் தலைமை மண்டபத்தில் அதிபர் எஸ்.வேலழகன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ம)

# நீராவியடிச் சம்பவங்களுக்கு மக்கள் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 3

முல்லைத்தீவு நீராவியடியில் இடம் பெற்ற சம்பவத்தைச் சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியம் கவலைதரும் விடயமாக நோக்குகின்றது.

இது பற்றி ஒன்றியம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமூகங்களுக்கு இடையிலே ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்கக்கூடிய உரையாடல்களை முன்னெடுப்பதன் மூலம் எதிர்காலத்திலே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் கடமை எம் அனைவருக்கும் உரியது.


கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி பொதுபல சேனாவின் சங்கைக்குரிய ஞானசாரதேரர் உள்ளடங்கலான பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் குருகந்தா புராண ரஜமஹா பௌத்த விகாரையின் கொலம்பே [illegible] கார தேரரின் சடலத்தை நீதிமன்ற உத்த[illegible]ரவை மீறும் வகையில் ஆலய வளாகத்தில் தகனம் செய்தனர்.

இந்துக்களின் வணக்கத் தலங்களின் உள்ளே வைத்து இறந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதை பெரும்பாலான இந்துக்கள் புனிதமற்ற செயலாகவே கருதுகிறார்கள்.

இந்தநீதிமன்றக் கட்டளையை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராகப் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலாதிக்க சிந்தனை கொண்டுள்ள அரசியல்வாதிகளினதும் மதவாதமனநிலையைக் கொண்டிருக்கும் சில பௌத்த பிக்குகளினதும் நிகழ்ச்சி நிரல்களுக்குச் சாதகமான முறையில் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களின் வரலாற்றை அரசியல் மயமாக்கும் செயற்பாடுகளில் நாட்டின் தொல்பொருள் திணைக்களம் சில [illegible]ட்டுவரு[illegible] என்றுள்ளது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறையில் இருந்து தப்பித்து குகைக்குள் மறைந்திருந்தவர்

## 17 ஆண்டுகளின் பின்னர் சிக்கினார்!

பீஜிங்,ஒக்.3

சிறையில் இருந்து தப்பித்த ஒருவர் 17 வருடங்களாகக் குகையில் வாழ்ந்து வந்துள்ளார். அவரைக் பொலிஸார் கைது செய்தனர். சீனாவின் யுனான் மாகாணத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

யுனான் மாகாணத்தின் யோங்ஷான் நகரைச் சேர்ந்த சாங் சியாங் என்பவர் பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்திய வழக்கில் 2002ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் சில நாள்களிலே அவர் சிறையில் இருந்து தப்பித்துவிட்டார். அதன்பின்னர் பல இடங்களில் தேடியும் அவரைப் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தநிலையில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு சாங் சியாங், யோங்ஷான் நகரில் உள்ள ஒரு மலைப்பகுதியில் அவர் பதுங்கி இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. குகையில் பதுங்கியிருக்கின்ற கைதிக்குத் தெரியாமல் அவரைப் பிடிப்பதற்காகக் கமரா பொருத்தப்பட்ட ஆளில்லா வானூர்தி ஒன்றைக் கொண்டு அந்த மலைப்பகுதியில் தேடுதல் நடத்தினர். இந்தத் தேடலின் போதே குகையில் பதுங்கியிருந்த சாங் சியாங் பிடிபட்டார். மலைகளுக்கு நடுவே உள்ள குகையை வீடாகப் பயன்படுத்திய அவர், ஆற்று நீரை பயன்படுத்திக் கொண்டு, மரங்களை வெட்டி நெருப்பை உண்டாக்கி, காட்டில் கிடைத்தவற்றைச் சமைத்துச் சாப்பிட்டு காட்டுவாசிபோல 17 வருடங்களாக வெளியுலகுக்குத் தெரியாமல் வாழ்ந்து வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ஈரானுக்குச் செய்தி அனுப்பியது சவூதி?

தெஹ்ரான்,ஒக்.3

பிற நாட்டுத் தலைவர்கள் மூலம் சவூதி தமக்குச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளதாக ஈரான் தெரிவித்தது. ஈரான் அரசின் செய்தித் தொடர்பாளரே இவ்வாறு தெரிவித்தார். ஈரான் அதிபர் ஹுசன் ரவுகானிக்குப் பல்வேறு நாடுகள் மூலம் சவூதி ஒரு செய்தியை அனுப்பியுள்ளது. சவூதி அரேபியா மாற்றத்தை விரும்பினால் ஈரான் அதை வரவேற்கிறது' என்று அவர் தெரிவித்தார். ஆனால், சவூதி அரேபியா அனுப்பிய செய்தி குறித்த தகவல் எதையும் அவர் கூறவில்லை.

சவூதி இளவரசர் முகமது பின் சல்மான், தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், "ஈரானுக்கும் , சவூதிக்கும் மோதல் ஏற்பட்டால் உலகப் பொருளாதாரத்தில் சரிவு ஏற்படும். சவூதி மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளும் பாதிக்கப்படக்கூடும். எனவே ஈரானுடன் அமைதிப் பேச்சுவார்த்தையே சிறந்தது" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அகதி முகாமில் தீ 2 பேர் சாவு!

## கிரேக்கத்தில் சோகம்

எதேன்ஸ்,ஒக்.3


கிரேக்கத்தில் அகதிகள் தங்கவைக்கப்பட்டிருந்த முகாமில் தீ பரவியதில் ஒரு குழந்தையும், பெண் ஒருவரும் சாவடைந்தனர். கிரேக்கத்தில் உள்ள லெஸ்போஸ் தீவில் இந்தச் சோகச் சம்பவம் நடந்தது. குறித்த தீவிலுள்ள அகதி முகாமில் சிரியா, துருக்கி ஆகிய நாடுகளில் இருந்துவரும் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த முகாமில் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்தையடுத்து போதிய அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வராததால் அங்கு கலவரங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிரேக்கத்தில் உள்ள 10அகதிகளைத் துருக்கி திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கிரேக்கத்தின் அரசு கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







சீனாவின் சுதந்திர நாள் நிகழ்ச்சியில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்புக்களைச் சித்திரிக்கின்ற ஒளிப்படங்கள் இவை.

# இன்றைய நாள்

**மேடம்:** நண்பரின் ஆலோசனையால் நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். குடும்பச் செலவுகளுக்கான பணத்தேவை அதிகரிக்கும். தியானம், தெய்வ வழிபாடு மனதில் அமைதியை தரும்.

**இடபம்:** உறவினர் அன்பு, பாசத்துடன் பழகுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். இஷ்ட தெய்வவழிபாடு இனிதாக நிறைவேறும்.

**மிதுனம்:** மனதில் இருந்த கவலை நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பணவரவில் திருப்திகரமான நிலை உருவாகும்.

**கடகம்:** சுற்றுப்புற சூழ்நிலை தொந்தரவு தரலாம். நிதானித்துச் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். குடும்பச் செலவுக்கு கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள்.

**சிம்மம்:** சிலரது பேச்சு மனம் தளர செய்யும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்படும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுகளுக்குப் பயன்படும்.

**கன்னி:** பிறருக்கு உதவுகின்ற சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் அனுகூலம் உருவாகும். பண பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** பணத்தேவைக்காக உறவினர் உங்களை அணுகுவார். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகலாம். பணவரவைவிட செலவு அதிகரிக்கும். அரசு தொடர்பான அனுகூலம் தாமதமாகலாம்..

**விருச்சிகம்:** மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும். பகைவரால் உருவான நெருக்கடி பலமிழந்துபோகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். லாப விகிதம் திருப்திகரமாகும்.

**தனுசு:** எவரிடமும் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சாதக சூழ்நிலைகளை அறிந்து கொள்வது அவசியம். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** நண்பருக்கு முன்னர் செய்த உதவிக்கான நற்பலன் தேடிவரும். புதிய நம்பிக்கையுடன் பணிகளை தொடங்குவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும்.

**கும்பம்:** உங்கள் பேச்சில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். விலகிச் சென்ற உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணி நிறைவேறும்.

**மீனம்:** உங்கள் செயலில் குளறுபடி ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை சிரமங்களைச் சரிசெய்ய உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற மென்மையான அணுகுமுறை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ, ஆயுத வலிமையை வெளிப்படுத்திய சீனாவின் பேரணி!






பீஜிங்,ஒக்.3
சீனாவின் போராட்டத் தலைவர் மாஓ சேதுங் தலைமையில் நடந்த கொம்யூனிஸ்ட் புரட்சியின் முடிவில் 'சீன மக்கள் குடியரசு' தோற்றுவிக்கப்பட்டது.

அதன் 70ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் (ஒக்ரோபர் 1) சீனாவில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியில் திறன் மிக்க நவீன ஆயுதங்கள் பெருமளவில் இடம்பெற்றன.

சீன இராணுவத்தைச் சீரமைத்து மறுகட்டுமானம் செய்து உலகத் தரமான இராணுவமாக ஆக்குவதற்கு 2015ஆம் ஆண்டில் சீன அதிபர் ஷி ஜின்பிங் எடுத்துள்ள முயற்சி நிறைவேற்றி வருவதை இது குறிப்பதாக அரசியலவதானிகள் கருத்துரைக்கின்றனர்.

பன்னாட்டு அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் ஆதிக்கம் செலுத்திவரும் சீனா, தனது தேசிய தினத்தன்று காட்சிப்படுத்திய ஆயுத, தளபாடங்கள் ஆயுத வலிமையிலும் சீனா தன்னை முன்னிலைப்படுத்துவதைக் காட்டுவதாகவும், சில ஆண்டுகளுக்கு முன்னர் வளரும் நாடாக இருந்த சீனா இன்று அமெரிக்காவின் பன்னாட்டு வல்லாமைக்குச் சவால்விடும் திறன் உடைய ஒரே உலக நாடாக இருக்கிறது என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். மிகவும் குறுகிய காலத்தில் உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடு ஆக்கியுள்ள சீனா அனைத்துத் துறைகளிலும் அமெரிக்காவுக்குப் போட்டியாக விளங்கும் நாடாகவும் மாறியுள்ளது.

பொருளாதாரத்தில் மட்டுமல்லாது இராணுவப் பலம் மூலமும் பன்னாட்டு அரசியலில் பெரும் சக்தியாக உள்ளது சீனா.

இதன் தொடர்ச்சியாகவே தேசிய நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அணிவகுப்பில் தனது இராணுவ வல்லமையை வெளிப்படுத்தியிருக்கிறது.



## அமெரிக்கா – வடகொரியா ஒக்ரோபர் 5இல் பேச்சு!

பியோங்ஜாங்,ஒக்.3
அணுஆயுதப் பாவனை தொடர்பாக அமெரிக்கா வடகொரியா இடையே ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதியன்று பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்தப் பேச்சுக்கு இரண்டு நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளதாக வடகொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தப் பேச்சுக்கு அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது. வடகொரியப் பிரதி நிதிகள் தயாராக உள்ளனர் என்று வடகொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பை வடகொரியாவுக்கு வருமாறு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அழைப்பு விடுத்திருப்பதாகத் தென்கொரியா ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தமையும் இது குறித்துத் தெளிவான முடிவுகள் இல்லாமல் இருந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஹொங்கொங்கின் இறையாண்மை பாதுகாக்கப்படும்

### தேசிய தின உரையில் ஜி ஜின்பிங் தெரிவிப்பு

பீஜிங்,ஒக்.3
சீனாவின் சுயாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் இறையாண்மை பாதுகாக்கப்படும் என்று சினாவின் தேசிய தின உரையில் சீன அதிபர் ஜி ஜின்பிங் தெரிவித்தார். சீனாவின் தலைநகர் பீஜிங்கில் உள்ள தியானன்மென் சதுக்கத்தில் நடந்த தேசிய நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே சீன அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு நாடு இரண்டு ஆட்சிமுறை எனும் கோட்பாடு ஹொங்கொங்கில் பாதுகாக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன். ஹொங்கொங்கின் இறையாண்மை பாதுகாக்கப்படும் என்றார். சீனாவின் தேசிய தினத்தையொட்டி , ஹொங்கொங்கில் போராட்டங்களை முன்னெடுத்த போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.





ஹெய்ட்டியின் அதிபர் ஜோவெனல் மொய்சின் பதவி விலகவேண்டும் என்று கோரி, அதன் தலைநகர் போர்ட்ஓ பிரின்ஸில் நடந்த போராட்டத்தின் போது காயமடைந்த ஒருவர் தனது காயங்களைக் காட்டுகிறார்.

## இந்தியாவில் வெள்ளம் பத்துக்கும் மேற்பட்டோர் சாவு!

### ஐ.நா. கவலை தெரிவிப்பு

புதுடெல்லி,ஒக்.3
இந்தியாவில் பெய்துவருகின்ற தென்மேற்குப் பருவமழை காரணமாக மகாராஷ்டிர, பிஹார், குஜராத் உள்ளிட்ட மாநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின. குறித்த மாநிலங்களில் உள்ள கோதாவரி, கிருஷ்ணா உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அங்கு மழை தொடர்ந்து பெய்துவரும் நிலையில், மழை வெள்ளத்தில் சிக்கி 10க்கும் மேற்பட்டோர் சாவடைந்தனர். தெலங்கானா மாநிலத்திலுள்ள ஹைதராபாத்தில் ஒரு நாளில் 15 சென்ரி மீற்றர் மழையும் பிஹார், உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பலத்த மழையும் பெய்து வருகிறது. இந்த நிலையில் இந்த இடரால் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கு ஐ. நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ் கவலை தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனிதாபிமான ரீதியிலான உதவிகளைச் செய்வதற்கு ஐ. நா. தயாராக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமலாக்க...

யாழ்ப்பாணத்தில் உள்ள ரிம்பர் மண்டபத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அநுரகுமார திஸநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

தெற்கில் இருந்து தலைவரொருவரை நியமிப்பதே இந்த அரச தலைவர் தேர்தல் என்று யாழ்ப்பாண மக்கள் நினைக்கின்றனர். ஆகவே கடந்த காலத்தில் இந்தத் தேர்தலில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. வடக்கு மக்களின் ஆதரவும் பெரியளவில் கிடைக்கவில்லை.

ஜே.வி.பியை ஏனைய கட்சிகள் போன்று எண்ணாதீர்கள். நாம் வடக்குக்கு பெருமளவு செய்யவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். தெற்குக்கு உரிய கட்சி மட்டுமல்ல ஜே.வி.பி. ஆகவே பழைய அரசியல் காட்சிகளை புறம்தள்ளி எம்மை ஆதரியுங்கள்.

போரின் போது எம்மால் எதுவும் கூற முடியவில்லை. அந்த குற்ற உணர்ச்சி உள்ளது. ஆனால் போரின் வலியை நன்கு அறிவோம். சாவைவிட காணாமல் போன உறவுகள் இல்லை என்ற வலி அதிகம். என்னுடைய சகோதரனும் இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

ஆகவே காணாமல் போனவர்கள் தொடர்பாக உண்மை நிலையை வெளிப்படுத்த நாம் தயாராக உள்ளோம். உறவுகள் எங்கே?, என்ன நடந்தது? என்பன தொடர்பான உண்மை நிலை என்ன வென்று மக்களுக்கு தெரியப்படுத்துவோம். மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் உள்ளன. அவற்றை விடுவிக்கவும் உரிய முயற்சிகளை மேற்கொள்ளுவோம். வடக்கின் சந்தை வாய்ப்புக்களையும், வடக்குக்கு உரித்தான சிறப்பு உற்பத்திகளையும் நாம் மேலும் ஊக்குவிப்போம் -என்றார். (ம-7)

## எழுத்துமூல...

வாறு வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் காலங்களில் மாத்திரம் தமிழ் அரசியல் தலைவர்கள் எழுத்து மூல ஒப்பந்தம் கோருவது ஏமாற்று வேலை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மாத்திரம் அல்ல தமிழ் அரசியல் தலைவர்களும் இந்த வரலாற்றில் எத்தனை தடவை இவ்வாறான ஒப்பந்தங்களை எழுதி எடுத்துள்ளனர். அனைத்தும் கிழித்து எறியப்பட்டுள்ளன. அவ்வாறான எழுத்து மூல ஒப்பந்தம் மாத்திரம் போதுமானதல்ல. நம்பிக்கைதான் முக்கியமாகும் - என்றார். (ம-ஒ,5)

## அரச தலைவர்...

அரச தலைவர் தேர்தல் நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதற்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 7ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான கட்டுப்பணத்தை வேட்பாளர்கள் தற்போது செலுத்தி வருகின்றனர். நேற்று மூன்று பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில், கட்டுப்பணம் செலுத்தியவர்களின் எண்ணிக்கை தற்போது வரையில் 20ஆக அதிகரித்துள்ளது. (ம-105)

## பெரமுன...

முன்னிறுத்தியுள்ள ஜனநாயக தேசிய கூட்டணிக்கு ஆதரவு வழங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்கியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களை நேற்றிரவு சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த உறுதிமொழியை கொடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

ஒக்ரோபர் 5ஆம் திகதி நடக்கவுள்ள சுதந்திரக் கட்சியின் மையச் செயற் குழுக் கூட்டத்தில், பொதுமக்கள் கூட்டணியில் இணைந்து கொள்வதற்கான இணக்கப்பாடு ஏற்படாவிடின், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியில் இணைவதற்கு அரச தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் முன்னணியுடன் நாளை மறுதினம் இணக்கப்பாடு ஏற்படாவிடின், ஐக்கிய தேசியக் கட்சியுடன் 6ஆம் திகதி மற்றொரு சுற்று பேச்சு நடத்தப்படும் என்றும் அரச தலைவர் கூறியுள்ளார். (ஒ,5)

## அரச...

சம்பந்தன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் ஆகியோரைச் சந்தித்து சிவில் சமூகத்தினர் நேற்று வலியுறுத்தினர்.

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மனுவல் ஆண்டகை தலைமையில் யாழ்ப்பாணம் குரு முதல்வர் சின்மியா மிசன் சுவாமிகள், தென் கயிலை சுவாமிகள் உள்ளிட்ட சிவில் சமூகத்தினரே இந்தச் சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் பல்வேறு தமிழ் தரப்புக்கள் பல்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. சிலர் சஜித்துக்கு ஆதரவு என்றும், சிலர் கோத்தாவுக்கு ஆதரவு என்றும் சிலர் தேர்தலை புறக்கணிக்கப் போவதாகவும், இன்னும் சிலர் தமிழ்ப் பிரதிநிதியை நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி வரும் நிலையில் இந்தச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழர் தரப்புக்கள் ஒற்றுமையாக ஒருமித்த முடிவுக்கு வரவேண்டும் என்று இந்தச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பிலான பேச்சில் ஈடுபடத் தயார் என்று சம்பந்தன் அறிவித்துள்ளார்.

நேற்று மாலை கஜேந்திரகுமாருடன் பேச்சு நடத்திய சிவில் சமூகத்தினர், தேர்தல் தொடர்பான ஒன்றுபட்ட முடிவு தொடர்பில் கலந்துரையாட தனது சம்மதத்தையும் தெரிவித்துள்ளார்.

இன்று வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரனை சிவில் சமூகத்தினர் சந்திக்கவுள்ளனர். (ம-105,22)

## ஊடகங்களிடம்...

சனை கூறப்பட்டுள்ளதாக, அவரது இணைப் பேச்சாளர்களில் ஒருவரான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த டலஸ் அழகப்பெருமவிடம், கோத்தபாய ராஜபக்ச ஊடகங்களைச் சந்திக்காமல் செய்தியாளர் சந்திப்புகளை நடத்தாமல் தவிர்ப்பது ஏன் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'சட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலேயே கோத்தபாய ராஜபக்ச ஊடகங்களைத் தவிர்த்து வருகிறார். அரச தலைவர் தேர்தலுக்கு முன்னதாக அவருக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஊடகங்களிடம் இருந்து விலகியிருக்குமாறு, கோத்தபாய ராஜபக்சவுக்கு, சட்டவாளர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். கோத்தபாய ராஜபக்ச ஊடகங்களுக்கு நெருக்கமான ஒருவர். ஆனால் நீதிமன்ற வழக்குகளால் அவர் ஊடகங்களில் இருந்து விலகியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,5)

## ஆலய...

யில் கழகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மத நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் விரும்பும் அமைப்பு என்ற ரீதியில் மேற்குறித்த சம்பவங்களை யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நான்கு மதங்களும் மூவின மக்களும் இரு மொழி பேசுகின்றவர்களாக வாழ்கின்றனர். இலங்கை நாட்டில் ஒவ்வொருவரும் தமது மதத்தை, தமது இனத்தை, தமது மொழியை மாண்போடு மதிக்கும் போதுதான் மதநல்லிணக்கமும் சகவாழ்வும் ஏற்படும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்து மதத்தவரையும் அவர்களின் மதம் சார்ந்த புனிதமான கோட்பாடுகளையும் மதிக்காது பௌத்த மதத் தலைவர்கள் நடந்து கொண்டவிதம் வேதனைக்குரியதும் வெட்கித் தலைகுனிய வேண்டியதுமாகும்.

நீதி எங்கு மதிக்கப்படவில்லையோ நீதிமன்றத் தீர்ப்பு எங்கு உதாசீனப்படுத்தப்படுகின்றதோ அங்கு அமைதி ஏற்படவாய்ப்பில்லை. சட்டம் எல்லோருக்கும் சமம். நீதிமன்றத் தீர்ப்பு மீறப்படுகின்றபோது அதைச் சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள் தாக்கப்பட்டமை காட்டுமிராண்டித்தனமாகும்.

எனவே இத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டவர்கள், அதைத் தூண்டியவர்கள், பின்புலமாகச் செயற்பட்டவர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்களே - என்றுள்ளது. (த-135)

## வெல்வது...

பட்டாலும் அவை அனைத்தையும் முறியடிப்பேன் என்று தெரிவித்தார் கோத்தபாய ராஜபக்ச.

குருநாகலில் நேற்றுக்காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர்.

இந்த அரசு அரசியல் பழிவாங்கலை மேற்கொண்டு, இராணுவத்தினர், மதத் தலைவர்களை பழிவாங்குகிறது. பொருளாதாரத்தை சீர்குலைக்கும் போது நாங்கள் ஒரு அணியாக இணைந்தோம். அரசியல் ரீதியாக மிகப் பெரிய பயணத்தை மகிந்த ராஜபக்சவின் தலைமையில் ஆரம்பித்தோம். அதற்கமைய நாங்கள் முன்னிலையில் உள்ளோம். இம்முறை அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்பதை அறிந்து கொண்டு பல்வேறு சூழ்ச்சிகளை எமக்கு எதிராக மேற்கொண்டாலும் நாங்கள் மிகப்பெரிய வெற்றியைப் பதிவுசெய்வோம் என்பதை அறிவிக்க விரும்புகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

## விவாதத்துக்கு...

நிலைப்பாட்டை அறியும், நேரடி விவாத நிகழ்வு நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

மார்ச் 12 அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு, ஒக்ரோபர் 5ஆம் திகதி மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை அனைத்து தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்க ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சஜித் பிரேமதாசவும், மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவும் இணக்கம் தெரிவித்துள்ளனர். எனினும், இந்த தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ச, இந்த நேரடி விவாத நிகழ்வில் பங்கேற்க இன்னமும் இணக்கம் தெரிவிக்கவில்லை.

இந்த விவாத நிகழ்வில் முன்னரே தெரிவு செய்யப்பட்ட கேள்விகள், முதன்மை வேட்பாளர்களிடம் எழுப்பப்படும். பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, பெண்கள் உரிமைகள், உள்ளிட்ட பரந்துபட்ட விவகாரங்கள் குறித்து வேட்பாளர்களிடம் கேள்விகளை எழுப்புவதற்கான சிறப்பு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## இழப்பீடனைத்தும்...

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்கள் என 707 பேருக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று அதற்காக ஒதுக்கப்பட்ட பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான ஆயிரத்து 142 பேருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்காக 177 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துடன் மேலும் 750 பேருக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விபத்தில்...

உயிரிழந்தவராவார்.

கொழும்பில் இருந்து பயணி ஒருவரை ஏற்றிவந்த மூடுந்து, யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற டிப்பருடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளாகியது.

மூடுந்தின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மூடுந்தில் பயணித்த பயணி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-6)

## இரட்டைக்...

அரச தலைவரே வழங்கியுள்ளார். அது சட்டவிரோதமானது என்று சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் வாதிட்டார்.

அதனால் கோத்தபாய ராஜபக்சவை இலங்கை குடிமகனாக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அவ்வாறு இலங்கை குடிமகன் இல்லாத ஒருவர் நாட்டின் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவும், அதனால் கோத்தபாயவின் கடவுச் சீட்டு மற்றும் அடையாள அட்டை என்பனவற்றின் செயற்பாடுகளுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்று சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ கோரினார்.

அமைச்சரவை நியமிக்கப்படாத போது, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிராதபோது, நாட்டின் நிறைவேற்று அரச தலைவர் என்ற ரீதியில் அமைச்சரவையின் அதிகாரங்களை பயன்படுத்த சட்ட ரீதியிலான உரிமை அரச தலைவருக்கு உள்ளது என மூத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நரின் புள்ளே தனது வாதத்தில் சுட்டிக்காட்டினார்.

அந்த அதிகாரத்தின் பிரகாரம், அப்போது அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச 2005ஆம் ஆண்டில் கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமை சான்றிதழில் கையெழுத்திட்டுள்ளதாகவும் அந்த நடவடிக்கை சட்ட ரீதியிலானது என்பதே தமது நிலைப்பாடு எனவும் நரின் புள்ளே தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்த மனு மீதான மேலதிக வாதங்கள் இன்று பி.ப. 1.30 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிண்ணத்தை மா. செயலரிடம் கையளிக்கும் நிகழ்வு

முல்லைத்தீவு,ஒக்.3

நடைபெற்று முடிந்த 13ஆவது வடமாகாண விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடத்தைப்பெற்று, கைப்பற்றிய வெற்றிக் கிண்ணங்களை மாவட்டச் செயலரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான 13ஆவது விளையாட்டு விழா யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்டம் 34 தங்கப் பதக்கங்கள், 43 வெள்ளிப் பதக்கங்கள், 49 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 126 பதக்கங்களைக் கைப்பற்றி முதன் முறையாக இரண்டாம் இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# புத்தூர் வளர்மதி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக்.3

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அரச தலைவர் தங்க கிண்ணத்துக்கான திறந்த பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலாவது செற் ஆட்டத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 25:22 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது.

இரண்டாவது செற் ஆட்டத்தை புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 25:20 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது. கடும் போராட்டத்தின் பின்னர் மூன்றாவது செற் ஆட்டத்தை புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 25:23 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது.

நான்காவது செற் ஆட்டத்தையும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 25 : 19 என்ற செற் கணக்கில் கைப்பற்றி, 3:1 என்ற செற் கணக்கில் கைப்பற்றி கிண்ணம் வென்றது.

வலைப்பந்தாட்டப் போட்டியில்

## தெல்லிப்பழை யூனியன் கிண்ணம் வென்றது

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தமது 90ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

இந்தத் தொடர் கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 24:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றின.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 13:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றின. (422)



## கிண்ணத்தைச் சுவீகரித்தது தொண்டமானாறு வீரகத்திபிள்ளை

யாழ்ப்பாணம்,ஒக்.3

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 90ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான 21 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டத் தொடரில் தொண்டமானாறு வீரகத்திபிள்ளை வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து தொண்டமானாறு வீரகத்திபிள்ளை வித்தியாலய அணி மோதியது.

முதல் இரு செற் ஆட்டத்தை தொண்டமானாறு வீரகத்திபிள்ளை வித்தியாலய அணி 25:21, 28:26, என்ற செற் கணக்கில் கைப்பற்றியது. மூன்றாவது செற் ஆட்டத்தை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:22 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது. நான்காவது செற் ஆட்டத்தை தொண்டமானாறு வீரகத்திபிள்ளை வித்தியாலய அணி 25:23 என்ற செற் கணக்கில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணி 25:18, 27:25 என்ற செற் கணக்கில் கைப்பற்றி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (23, 108)

## சென்.சேவியர் – உருத்திரபுரம் இறுதிக்கு முன்னேறியது

யாழ்ப்பாணம்,ஒக்.3

முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டுநிறைவை வடமாகாணம் ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

நேற்றுமுன்தினம் சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பறாங் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 3:1 கோல் கணக்கில் தேவன்பிட்டிசென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)




## அக்கடமி ஒவ் ஜப்பனிஸ் றியு மாட்சல் ஆட்ஸ் மாணவர்கள் 24 பதக்கங்களை வென்றனர்

இலங்கை தேசிய கராத்தேதோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் அக்கடமி ஒவ் ஜப்பனிஸ் றியு மாட்சல் ஆட்ஸ் மாணவர்கள் 14 தங்கம், 2 வெள்ளி, 8 வெண்கலம் உட்பட மொத்தமாக 24 பதக்கங்களை கைப்பற்றினர்.

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வட மாகாண கராத்தே போட்டியில் எஸ். பிரித்திகா காட்டா, குழு காட்டா, குமித்தே போட்டியில் தங்கப்பதக்கத்தையும், பி.ஜெனோஷா காட்டா, குழு கட்டாப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும், கே.சூரியகுமார் காட்டா, குமித்தே போட்டியில் தங்கப்பதக்கத்தையும், ஆர். சதீஸ்குமார் குமித்தே போட்டியில் தங்கப்பதக்கத்தையும், எஸ்.அனோஜன், குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும், காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், டபிள்யூ வத்ஷலா வினோதினி காட்டா, குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும், பி.நிஷானி காட்டா, குழுக் காட்டா போட்டியில் தங்கப் பதக்கத்தையும், எஸ். சுதீஸ் குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், ரி. நிறோஜன் குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், டி.எஸ்.அருள்தெய்வீகன் காட்டா போட்டியில் தங்கப் பதக்கத்தையும், குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், டி.எஸ். ஆன் விலிலியா காட்டாப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும். பி. ஜெனார்த்தன் காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், எஸ். ஆத்மன் காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், எஸ். மேனுஷன் குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், பி.பிரித்திவிராஜ் காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தனுஷ்க குணதிலகவின் சதம் வீண்

# தொடரைக் கைப்பற்றியது பாகிஸ்தான் அணி

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் 3 ஒருநாள் தொடர், மூன்று ரி-20 போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று இடம்பெற்ற இறுதி ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தனுஷ்க குணதிலக, பெர்னாண்டோ களமிறங்கினர். இருவரும் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போது பெர்னாண்டோ 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

வந்தார் திரிமன்னே அவர் சிறிது தாக்குப் பிடித்து அணியை ஓரளவு ஓட்ட எண்ணிக்கையைப் பெற வைத்தார். மறுமுனையில் தனுஷ்க சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் ஓர் 6 ஓட்டம், 16 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 133 ஓட்டங்களைக் குவித்து அணிக்குப் பலம் சேர்த்தார். திரிமன்னே, பானுக இருவரும் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். இறுதியில் சானக அதிரடி காட்டினார். அவர் 24 பந்தில் 2 ஆறு ஓட்டங்கள் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 297 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் அதிகபட்சமாக அமீர் சிறப்பாக பந்து வீசி 3 இலக்குகளைச் சரித்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வெற்றியை நோக்கி மிக நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணியின் முதலாவது இலக்கு அணி 123 ஓட்டங்களைப் பெற்றபோதே சரிக்கப்பட்டது. அபிட் அலி எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இணைந்தார் பாபர் அசாம் அவரும் ஒரு சீரான இடைவெளியில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். அணியின் இலக்குகள் ஒரு சீரான இடைவெளியில் இழக்கப்பட்டாலும் இலக்கை நோக்கி சரியாகப் பயணித்தது பாகிஸ்தான் அணி. இறுதி வரை பரபரப்பு காணப்பட்ட போதிலும், அணி வீரர் இப்தக்கர் அகமெட் களத்திலிருந்து இலங்கை அணி வீரர்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தார். அவரே போட்டியை முடித்து வைத்தார். அணி 48.2 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டிப் பிடித்து ஒருநாள் தொடரையும் கைப்பற்றியது.

# ஜெயசூரியாவை பின்தள்ளிய குணதிலக



பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் கராச்சி மைதானத்தில் அதிகூடிய ஓட்டங்களை பதிவுசெய்த இலங்கை வீரர் என்ற பெருமையை தனுஷ்க குணதிலக பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் 134 பந்துகளை எதிர்கொண்ட தனுஷ்க குணதிலக 16 நான்கு ஓட்டங்கள், ஓர் ஆறு ஓட்டம் அடங்கலாக 133 ஓட்டங்களைக் குவித்து முன்னாள் இலங்கை அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜயசூரியாவை பின்னுக்குத் தள்ளியுள்ளார்.

அத்துடன் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் கராச்சி மைதானத்தில் பெறப்பட்ட நான்காவது அதிகூடிய ஓட்டம் இதுவாகும். முன்னர் இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரியாவை 130 ஓட்டங்களுடன் நான்காவது இடத்திலிருந்தார். அவரைப் பின்னுக்குத் தள்ளினார் குணதிலக.

இந்தப் பட்டியலில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் வீரர் விவ் ரிச்சர்ட்ஸ் 181 ஓட்டங்களுடன் முதலிடத்திலும், கிரஹாம் கூச் 142 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் அணியின் சல்மான் பட் 136 ஓட்டங்களுடம் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

### 3 வருடங்களின் பின்னர்

# அணியில் இடம்பிடித்தார் பாக். வீரர் உமர் அக்மல்

இலங்கைக்கு எதிரான ரி-20 தொடருக்கான பாகிஸ்தான் அணியில் 3 வருடங்களின் பின்னர் உமர் அக்மல் இடம் பிடித்திருந்தார்.

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது. அதன்பின் இரு அணிகளுக்குமிடையில் மூன்று ரி-20 போட்டி இடம்பெறவுள்ளது. இதில் முதலாவது போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உமர் அக்மல், அகமது ஷேசாத் ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டனர்.

உமர் அக்மல் இறுதியாக 2016ஆம் ஆண்டு ரி-20 அணியில் விளையாடினார். அதன்பின்னர் இந்தத் தொடரில்தான் அணியில் இடம் பிடித்துள்ளார். தலைமை பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் உடன் ஏற்பட்ட தகராறு, நன்னடத்தைகளை மீறும் காரணங்களால் அவர் அடிக்கடி சர்ச்சையில் சிக்கியிருந்தார். இதனால் அவரை அணியில் இணைப்பது குறைவு.

அகமது ஷேசாத் கடந்து ஆண்டு ஜூன் மாதம் கடைசியாக அணியில் இடம் பிடித்திருந்தார். ஊக்கமருந்து உட்கொண்ட விவகாரத்தில் சிக்கிய அவருக்கு 16 மாதங்கள் அணியில் இடம் கிடைக்கவில்லை. தற்போது அணியில் இடம் பிடித்துள்ளார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இமாம்உல்ஹக் காயம் காரணமாக அணியில் இடம்பெறவில்லை.


### தென்.ஆப். - இந்தியா

# முதல் நாள் ஆட்டம் மழையால் இடைநிறுத்தம் ரோகித் சதம்

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய ரோகித் சர்மா, அகர்வால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ரோகித் சர்மா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் கடந்தார். அணி 59.1 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு இழப்பின்றி 202 ஓட்டங்களை எடுத்திருக்கும்போது மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் முதல்நாள் ஆட்டம் அத்துடன் முடிவு பெற்றதாக நடுவர்கள் அறிவித்தனர். களத்தில் ரோகித் சர்மா 115 ஓட்டங்களுடனும், மயங்க் அகர்வால் 84 ஓட்டங்களுடனும் உள்ளனர்.



### ஜப்பான் பகிரங்க ரென்னிஸ்

# ஜோகோவிச் காலிறுதிக்கு முன்னேற்றம்

ஜப்பான் பகிரங்க ரென்னிஸ் போட்டியில் முதன் நிலை வீரரான நோவக் ஜோகோவிச் காலிறுதிக்கு முன்னேறினார்.

ஜப்பான் பகிரங்க ரென்னிஸில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னைய சுற்றில் நோவக் ஜோகோவிச் ஜப்பானைச் சேர்ந்த கோசொயேடாவை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 6:3, 7:5 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தில்லையம்பலம் இராசேந்திரம்

**காரைநகர் தனியார் பஸ் உரிமையாளரும் இளைப்பாறிய தனியார் சிற்றூர்தி சங்க நேரக் கண்காணிப்பாளர்- காரைநகர் சங்கம்)**



கொட்டைப்புலம், களபூமி, காரைநகரை பிறப்பிடமாகவும் 119/14, பலாலி வீதி முன் ஒழுங்கை திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் இராசேந்திரம் கடந்த (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா- காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்பு கணவரும் சிவலிங்கராசா காலஞ்சென்ற இராசபூபதி மற்றும் தியாகராசா, வையந்திமாலா, லலிதாதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும் மகேஸ்வரி காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மணிமேகலை, பாலசிங்கம், மகாராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் லவநேசன் (சிறீ சிவராம் ரேடர்ஸ் , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.), திருக்குமரன் (சிறீ சிவராம் ரேடர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), அரவிந்தன் (பிரான்ஸ்), கமலக்கண்ணன் (லண்டன்), கல்யாணி ஆகியோரின் அன்பு தகப்பனாரும் சர்மிளா, இராசலட்சுமி, ருசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் முத்துலிங்கம்- சத்தியபவானி காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் நன்னிப்பிள்ளை, செல்வரத்தினம்- உதயகுமாரி ஆகியோரின் சம்பந்தியும் சகிசரண், அஞ்சனா, தேவசஞ்செய், கிருஷிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2019) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு 119/14, பலாலி வீதி, முன் ஒழுங்கை திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS24074(16/17)

**தகவல்: குடும்பத்தினர்**

**நேசன்- 077 756 0760 ,றஞ்சன்- 077 307 6917**

---

## சிங்கள வகுப்புக்கள்

O/L சிங்கள மொழி பரீட்சைக்கான
வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்நகர் | சுன்னாகம்

தொடர்பு: 076 791 7577

---

## வேலையாள் தேவை

நெல்லியடியில் உள்ள பிரபல்யமான பான்சிகடை மற்றும் புடைவை கடைக்கு அனுபவம் வாய்ந்த பெண் உதவியாளர்கள் மற்றும் முகாமையாளர் ஆண் தேவை. (CS/28443)

**0778137709**

---

## பணியாளர்கள் தேவை -(Vacancy)

1. தொழில்நுட்ப உதவியாளர் - TA
2. தொழில்நுட்ப அலுவலர் - TO

Contact No: 075 918 3940 (திங்கள் - சனி வரை
8.30 AM - 5.00 Pm மணிவரை மட்டும் தொடர்புகொள்ளவும்)
E-mail : starcontractors12@hotmail.com

---

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

---

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்...
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

0768226241

**V2 Travels**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

---

## மரண அறிவித்தல்



### குணரத்தினம் ரகு

(ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், 77, கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் ரகு (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) நேற்று (02.10.2019) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் குணரத்தினம் - லீலாவதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வமனோகரியின் (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்) அன்புக் கணவரும், ரேணுகா, சரவணன் (மருத்துவபீடம் 38 ஆம் அணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனனின் (இலங்கை வங்கி, மாங்குளம்) அன்பு மாமனும், ரதி, ரவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகேந்திரன், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் இந்திரமனோகரி, தெய்வமனோகரி மகேந்திரன், தபேந்திரன், ஜெயமனோகரி, சண்முகராஜா, புஷ்பகாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2019)வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**77, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 222 2436**

(cs.28435) (13/17)

---

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி கிறேஸ் தேவதாஸ் (வனிதா)

(முன்னாள் ஆசிரியர் யா/நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி கிறேஸ் தேவதாஸ் (வனிதா) 02.10.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் தேவதாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மருமகளும் துயிலன், விதுஷா ஆகியோரின் அருமைத் தாயும் வில்லியம் ஜோர்ஜ் (ஆசிரியர்), அன்ரன் றொபேட் (நெதர்லாந்து), காலஞ்சென்ற அன்ரன் குணசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை யுடன் திருப்பலி இன்று (03.10.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக். கொள்ளவும்.

**இல.192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்**

(CS/28444)

**தகவல்: குடும்பத்தினர்.**

---

**ES Printers**
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org